# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 4 இதழ் : 5 ஆகஸ்ட் 2025



SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

# உங்கள் கனவு இல்லம் இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!

SREE VISALAM CHIT FUND LTD
SVCF
ESTD 1947
79th YEAR

## 1 இலட்சம் சீட்டு முதல் 1 கோடி சீட்டு வரை....




ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

79th YEAR

**நம்பிக்கை, நாணயம், நேர்மை**

நிலையான தன்மையுடன், வாடிக்கையாளர் சேவையில்...

எங்களை, ஊக்குவிக்கும் வாடிக்கையாளர்கள்

**அனைவருக்கும் நன்றி**

+91 8667003356 | 04565 283 477 WWW.SREEVISALAM.COM

SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

**பதிவு அலுவலகம்:**
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

**நிர்வாக அலுவலகம்:**
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

**மத்திய அலுவலகம்:**
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

நமது மின்னிதழின் 40வது இதழ் இது. நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நமது மின்னிதழுக்கு ஆதரவு தரும் அனைவருக்கும் முதற்கண் எங்களின் பணிவான நன்றிகள் !

இணையதள மேம்பாடு மற்றும் நிர்வாக காரணங்களால் கடந்த மூன்று மாத இதழ்கள் வெளிவரவில்லை. இம்மாதம் தொடர்ந்து மீண்டும் இம்மலர் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி !

இன்னும் சில தினங்களில் விநாயகர் சதுர்த்தி வரவிருக்கிறது. அதைச் சிறப்பிக்கும் வகையில் இந்த இதழ் " விநாயகர் சதுர்த்தி " சிறப்பிதழாக மலருகிறது.

இந்துக்களின் எல்லாவிதமான தெய்வ வழிபாடுகளுக்கும் மற்றும் எந்தவொரு முக்கியக் காரணமானாலும், சுபகாரியங்கள் ஆனாலும் விநாயகர் வழிபாடு தான் முதல் இடம் பெறுகிறது. இது தமிழகத்திற்கு மற்றுமின்றி, உலகில் உள்ள எந்தவொரு மூலையில் வாழும், இந்து மக்கள் விநாயகர் வழிபாடே முதன்மையாகக் கொண்டார்கள்.

இவ்வுலகில் உள்ள பல்வேறு மதங்கள், தெய்வங்கள் என இருப்பினும், மதங்களைக் கடந்து, அனைத்து மக்களுக்கும் பிடித்தமான ஒரு தெய்வம் என்றால் விநாயகர் தான். அந்த விநாயகர் அவதரித்த நாளை கொண்டாடும் தினம் தான் விநாயகர் சதுர்த்தி ஆகும்.

விநாயகர் சதுர்த்தி என்பது விநாயகரை வழிப்படும் முக்கிய விழாவாகும். இது இந்துக்கள் மற்றுமின்றிப் பல்வேறு மதத்தினர் கொண்டாடும் ஒரு விழா ஆகும். ஒவ்வோர் ஆண்டும், தமிழ் மாதம் ஆவணி, வளர்பிறை சதுர்த்தி அன்று, விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்த வருடம் விநாயகர் சதுர்த்தியானது 27.08.2025 அன்று வருகிறது.

நம்தமிழகத்தில் அனைவராலும் விநாயகர் சதுர்த்தி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழகத்தில் பட்டித்தொட்டியெங்கும் பந்தல்கள் அமைத்து, விநாயகர் சிலைகளை நிறுவி பூஜைகளைச் செய்வார்கள்.

விநாயகர் பூஜைக்குக் கொழுக்கட்டை, சுண்டல், பொரி, பழங்கள், அருகம்புல் நைவேத்தியம் வைத்து சிறப்பிப்பார்கள்.

இந்தியா, ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டு இருந்த காலத்தில், அன்றைய இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான பாலகங்காதரத் திலகர் (1856–1920) தகடுஷேத் ஹல்வாயி கணபதி கோவிலில், விநாயகர் சதுர்த்தியில் போராட்டத்தைத் தொடங்கினர். அன்று பெரிய பிளாஸ்டர் ஆ∴ப் பாரிஸ் விநாயகரை அமைத்து ஊர்வலத்தைத் தொடங்கினர். அதில் ஆங்கிலேயருக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொண்டு, மக்களிடம் தேசியம் வளர ஊக்குவித்தார்.

பிற்காலத்தில் மராட்டிய மக்கள், தங்களுடைய கலாச்சார விழாவாகவும், குடும்ப விழாவாகவும் கொண்டாடத்தொடங்கினர். விநாயகர் சதுர்த்தியன்று, அங்குள்ள மக்கள் தங்களுடைய வசதிக்கேற்ப விநாயகர் சிலைகளை வைத்து கொண்டாடுகின்றனர்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தெய்வமான விநாயகரை வழிபடுவது மிகவும் எளிதானது. பூஜையைத் தொடங்கும்போது விநாயகரின் திருவுருவமோ, விக்கிரகமோ இல்லாமல் போனாலும் மஞ்சளில் ஒரு கூம்புபோலப் பிடித்து வைத்து அதையே பிள்ளையாராக நினைத்து பூஜையைத் தொடங்கலாம். விநாயகர் பெருமான் பூஜைக்குச் சிறப்பான பொருட்கள் என்று எதுவுமில்லை. அருகம்புல் அபிஷேகம் மற்றும் நிவேதனம் செய்வதிலேயே, ஆனந்தப்பட்டு ஏற்றுக்கொள்வார்.

விநாயகர் பிறந்த நாளான, இந்த அற்புதமான நாளில்
தும்பிக்கையானை நம்பிக்கையுடன், வழிபட்டால் சகல
சௌபாக்கியங்களும் கிடைத்து சிறப்பாக வாழலாம்.

கேட்டதையெல்லாம், கேட்டபடியே கொடுக்கும், விநாயகப்
பெருமானின் பிறந்தநாளை கொண்டாடுவோம். அவரது அருளும்,
ஆசியும் பெற்று நலமுடன் வாழ்வோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

# வாழ்த்தி மகிழ்வோம்...

**அன்பார்ந்த வாசகர்களே..**

நமது மின்னிதழில் வாழ்த்தி மகிழ்வோம் பகுதியில் வாசகர்கள் இனி தங்கள் குடும்ப உறுப்பினர்கள் திருமணம், பிறந்த நாள், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் இன்னும் பல இனிமையான தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் வாசகர்களோடு பகிர்ந்து மகிழலாம்.

**அட்டைப்படம் மற்றும் இதழில் ஒரு பக்க செய்திக்கான கட்டணம் : ரூபாய் 3000 மட்டும்**

**இதழில் ஒரு பக்கச்செய்தி : ரூபாய் 500 மட்டும்**

இனிய தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் குடும்பங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

தங்களது இல்ல நிகழ்வுகளை வெளியிட
இதழின் மின்னஞ்சல் முகவரி
naamnagarathar@outlook.com
அல்லது
96590 32994 என்ற
எண்ணில் தொடர்பு கொள்ளவும்



# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

ஆகஸ்ட் 2025

மலர் : 4  இதழ் : 5

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

**இதழாசிரியர்**

உமையாள்

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

PM
SWITCH TO THE FUTURE

# PALLATHUR MOTORS LLP

## PETROL RIDER LIFE

SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !




## ELECTRIC RIDER LIFE

SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!



# ELECTRIFY YOUR JOURNEY NOW

Go far and wide with just
a single charge

LECTRIX

Book Your TEST DR!VE Now!!



மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735

பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

## இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- நம்மைச்சுற்றி உள்ளோர் யாரென்று உணருங்கள்!
  –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. .......... 12

**சிறப்புப் பக்கம்**

- பிள்ளையார் எறும்புகள் .......... 20
- பிள்ளையார் சுழியின் தத்துவம்..!!! .......... 46
- மோதகத்தின் தத்துவம் .......... 61

**சிறுகதை**

- சலவை... – மீ.மணிகண்டன் – Texas USA .......... 24

**கவிச்சோலை**

- வல்லவர் – அரு. சிவகாமி இராமனாதன் ஒக்கூர் .......... 35
- கொடை வள்ளல் – கவிஞர் எம்.சோலை காரைக்குடி .......... 51

**மொழி**

- வாங்க பேசலாம் ..! – – பேரா. கு. அன்புமெய்யப்பன் .......... 36

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி .......... 42

**உணவே மருந்து**

- எந்த வாழைப்பழத்தில் என்ன நன்மை? .......... 52

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA .......... 60

**சமையல்**

- முட்டைக்கோஸ் மஞ்சூரியன் .......... 63

**நிதி மேலாண்மை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...
  – கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) – க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ .......... 68

**ஜோதிடம்**

- பன்னிரண்டு ராசிகளும்... ராசியான பிள்ளையாரும்... –ஜோதிடர் எல்லி .......... 80

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

VALATHI 2005

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ. 1,00,000/- முதல்**

**ரூ. 30,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064
0431-7968005

துவக்கம் 2005

94439 86143

# TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.

## VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,


"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1),அருணோதயா அபார்ட்மெண்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை – 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம், பழைய சொக்கநாதர் கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★




GET IT ON Google Play

# வணக்கம் வாசகர்களே...

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

# ஓர் வேண்டுகோள்

## விளம்பரம் அல்லது நன்கொடை கொடுத்து உதவுங்கள்

**வாசகர்கள் அன்பான கவனத்திற்கு**

கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மின்னிதழ் உலகளாவிய நகரத்தார் பெருமக்களுக்கு இலவச இதழாக சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் – மொபைல் செயலி (Mobile App) மூலமாகவும் மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மின்னிதழை அனைவரும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு பகிர்கிறார்கள்.

நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

**இதழின் வளர்ச்சியில் தாங்களும் பங்கேற்கும் வகையில் விளம்பரங்களும், நன்கொடைகளையும் அளித்து உதவுங்கள்.**

**அலைபேசி எண்ணில் G Pay செய்ய:**

**97917 76534**

**UPI Pin: senaadigital@okicici**

இதழில் விளம்பரம் செய்ய
கீழ்கண்ட எண்ணில் அழைக்கவும்.

**96590 32994**

# நம்மைச்சுற்றி உள்ளோர் யாரென்று உணருங்கள்!



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

"நாலு காசு இல்லை யென்றாலும் குறையில்லை! ஆனால் நாலு பேர் நமக்கு இல்லையென்றால் அது தான் மிகப்பெரிய குறை!" என்று கிராமங்களில் அடிக்கடி பெரியவர்கள் சொல்வார்கள்.

நான்கு பேரின் நட்புக்கிடைத்தால் தான் நாம் பல நேரங்களின் தளர்வின்றித் திகழ முடியும். நம்மைச்சுற்றியிருக்கும் அந்த நால்வரின் சொல்லும் செயலும் நமக்குள் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.



நமது திறமையை அவர்கள் குறைவாகவே மதிப்பீடு செய்வார்கள். அந்த நால்வரைப்பற்றியோ அல்லது உறவினர்கள் பற்றியோ, அல்லது நண்பர்களைப் பற்றியோ கண்களை மூடிக்கொண்டு அவர்களின் வார்த்தைகளை, செயல்பாடுகளைப் பற்றி எண்ணிப்பாருங்கள். அத்தகையோரில் இரண்டு பிரிவினர் இருப்பது நமக்குத் தெரியவரும்.

அதில் முதல் பிரிவினர் அடிக்கடி நம்மிடம் பயன் படுத்தும் வார்த்தைகள். நீ செய்யும் செயல் மிகவும் கடினமானது, முடியாது, முடியவே முடியாது, உன்னுடைய செயலால் உன்னை மற்றவர்கள் எப்படி மதிப்பார்கள் தெரியுமா? நீ அதிர்ஷ்டம் இல்லாதவன், உன்னுடைய பெற்றோர் உனக்காக சேர்த்து வைத்தது ஒன்றும் இல்லையே? போன்றவைகள் தான்.

இன்னொரு பிரிவினர் அடிக்கடி நம்மிடம் பயன் படுத்தும் வார்த்தைகள் உனது செயல் நேர்த்தியாக உள்ளது, நன்றாக உள்ளது, உன்னால் தான் முடியும், ஏன் இன்னும் தாமதம்?, முன்னேறிச்செல், போன்றவைகள் தான்.

இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது, முதல் பிரிவினரோடு நாம் தொடர்பில் இருந்தால், முதலில் நாம் இழப்பது நமது உற்சாகத்தைத்தான். அடுத்து இழப்பது நம்பிக்கையைத்தான். உற்சாகத்தையும் நம்பிக்கையையும் இழந்த பின்னாலே நமக்கு ஏற்படுவது "மன அழுத்தம்" இதன் விளைவால் நமது செயல்களை நாமே ஒத்திப் போடுவோம்.


இரண்டாவது பிரிவனரோடு நாம் தொடர்பில் இருந்தால், நாம் முதலில் பெறுவது உற்சாகம். அடுத்துப் பெறுவது சாதிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணம். இதனால் நாம் பெற்ற பயன் நமது செயல்களை நாமே முடுக்கிவிட்டு, நேர்த்தியாகவும், விரைவாகவும் செய்து முடிப்போம்.

எதிர்மறைச் சிந்தனையாளர்களால் நமது எண்ணங்கள் ஒரு நாளும் ஈடேறாது என்பதை கவனத்தில் வையுங்கள்



நம்மோடு தொடர்பில் இருக்கும் எதிர்மறைச் சிந்தனையாளர்கள்," கொடிய நோய் வைரஸ் கிருமிகள்" போன்றவர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். இத்தகைய குணம் படைத்தோர், நம்மை நாம் அறியாமலேயே அவர்களது பொறியில் சிக்கவைத்து விடுவார்கள். இத்தகையோரிடம் ஒருநாளும் ஆலோசனை கேட்காதீர்கள். "பல ஆயிரம் லிட்டர் தண்ணீரை வண்ணமயமாக்க ஒரு துளி சாயம் போதும்!" என்பார்கள். அதைப்போல எதிர்மறைச் சிந்தனை கொண்ட ஒரு மனிதரால் நமது முயற்சிகள் பாழாகிப்போகும்.

எனது நண்பரின் மகள் பத்மா சிறுவயது முதலே தான் ஒரு சிறந்த பரத நாட்டியக்கலைஞர் ஆக வேண்டும் என்று விரும்பினாள். தனது மகளின் விருப்பத்தை புரிந்துகொண்ட பெற்றோர், அடுத்த ஊரிலுள்ள ஒரு பரத நாட்டியக்கலைஞரிடம் மகளை அழைத்துச் சென்று தனது மகளின் விருப்பத்தைச் சொன்னார்கள். உடனே அவர் அந்தப்பெண்ணைப் பார்த்து உனக்குத்தெரிந்த நடனத்தை ஆடிக்காட்டு என்றார். உடனே அந்தப்பெண்ணும் பரதநாட்டியம் ஆடியது



சற்றுநேரம் கழித்து வந்த அந்த மனிதர், அந்தப் பெண்ணைப் பார்த்து, உன்னிடம் திறமை ஏதும் இல்லை.எனவே நீ பரத நாட்டியக் கலைஞராக வேண்டும் என்ற எண்ணத்தை கைவிட்டு விடு என்றார். அந்தப்பெண் உள்ளத்தால் உடைந்து போனாள். தனது ஆசையைத் ஒருநாளும் துறக்கவில்லை. பெற்றோரின் நிம்மதிக்காக ஒரு பள்ளியில் ஆசிரியையாகப்பணிக்குச் சேர்ந்தார்.

ஒருநாள் பள்ளியில் நடன ஆசிரியை வரவில்லை. குழந்தைகள் தாங்களாகவே நடனம் ஆடிக் கொண்டு இருந்தனர். அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர், பத்மாவை அழைத்து, நடன வகுப்பை மேற்பார்வையிடும் பணியை ஒப்படைத்தார்.

அரைமணி நேரம் கழித்து அந்தப்பள்ளியின் தலைமை ஆசிரியர் நடன வகுப்பை பார்வையிட வந்தார். அங்கே பத்மா ஒரு சிறந்த பரதநாட்டியக் கலைஞர் போல பிள்ளைகளுக்கு நடனக்கலையின் சகல பரிமாணங்களையும் கற்றுக்கொடுத்தார்.

இதைப்பார்த்து வியந்த தலைமை ஆசிரியர், பத்மாவிடம் நீங்கள் பரத நாட்டியக்கலைஞரா? என்று கேட்டார்.

அதற்கு பத்மா நான் ஒரு பரதநாட்டியக்கலைஞராக வரவேண்டும் என்றுதான் விரும்பினேன். ஆனால் நான் சந்தித்த ஒரு பரத நாட்டியக்கலைஞர், உன்னிடம் திறமையில்லை. நீ பரதநாட்டியம் ஆடாதே! என்று சொல்லிவிட்டார். அதன்பின் நான் முயற்சிக்க வில்லை என்றார்.

உடனே தலைமை ஆசிரியர், நீங்கள் நன்றாக பரநாட்டியம் ஆடுகிறீர்கள். எனவே அந்தத்துறையில் சிறந்து விளங்க முயற்சி செய்யவும். நாளை என்னுடன் வாருங்கள். நான் ஒரு சிறந்த பரத நாட்டியப்பள்ளிக்கு அழைத்துச்செல்கிறேன் என்றார்.



தலைமை ஆசிரியர் சொன்னபடியே பத்மாவை ஒரு சிறந்த குருவிடம் அழைத்துச் சென்றார். அங்கு பயின்ற பத்மா பின்னாளில் பரதக் கலையில் உலகப்புகழ் பெற்றார். எதிர்மறைச்சிந்தனை கொண்ட ஒருவரால் பத்மாவின் நடன ஆற்றல் 15 ஆண்டு காலம் முடக்கப்பட்டது. அதே நேரம் மற்றொருவரின் வழிகாட்டுதலால் பத்மா நடனக்கலையில் சாதிக்க முடிந்தது.

உங்களை விமர்சிப்பவர் களைக்கூட அருகில் வைத்துக் கொள்ளுங்கள்! அவர்கள் நம்மைப் பண்படுத்தி நேர்த்தியான மனிதனாக ஆக்க உதவுவார்கள்.

உங்களைச்சுற்றி இருக்கின்ற எதிர்மறைச் சிந்தனை கொண்டோரை விட்டு விலகி நில்லுங்கள்!

எப்போதும் ஒரு வெற்றியாளனாக உங்களைக் கருதிக் கொள்ளுங்கள்! "உங்களால் சாதிக்க முடியும்,!" என்பதில் உறுதியாக இருங்கள்!

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே!என்ன சரிதானே!

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com



நாம் நகரத்தார்
சமூக இணையதள மின்னிதழ்

இப்போது உங்களின் மேம்பட்ட
வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

Naam Nagarathar Mobile App

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...

GET IT ON Google Play

உடல் பிணிக்கு மட்டுமல்ல, வினைப் பிணிகளுக்கும்
உற்ற மருந்து வேல்மாறல் மகா மந்திரம்.

# வினைகள் தீர்க்கும்
# வேல்மாறல்
## மகா மந்திரம்

( வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்
தொகுத்தருளியது )




**தினமும் பாராயணம்**
**செய்யும் வகையில் எளிய நடையில் புத்தகமாக**

- வேல் வழிபாடு
- வேல் மாறல் பொருள் விளக்கம்
- வேல் மாறல் பாராயணம் செய்யம் முறை
- முருகனின் முதற்கற்றளிக் கோயில்
  என பல்வேறு தகவல்களுடன்

விலை
ரூபாய்
**46/-**
தபால் செலவு தனி

வெளியீடு : அனுஷம் புக்ஸ் - கோவை

புத்தகத்தினை ஆர்டர் செய்ய :
**96590 32994**
எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

**தினமும் வேல் மாறல் பாராயணம் செய்து கலியுக கடவுள் கந்தன் அருள் பெறுவோம்**

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NKF

**Our culture is financial Discipline**

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani

1983 - 2025
43rd
ANNIVERSARY

1 Lakhs to Crore

**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

# பிள்ளையார் எறும்புகள்



சகல ஜீவராசிகளுக்கும், தேவர்களுக்கும் படியளப்பவர் சிவ பெருமான். அவனில் பாதியாம் அன்னை பராசக்திக்கு அண்ணலின் பணி தெரியாதா என்ன ?. ஆனாலும் அவளுக்கு மனதில் சிவபெருமான் பணி மேல் ஒரு சிறுசந்தேகம் ,'இந்தத் பணியை ஈசன் செவ்வனே செய்கிறாரா ? என்று . கேள்விக்கான விடையின் தேடலை அன்னை தொடங்கினாள்.

ஒரு சிறிய பாத்திரம் அதில் சில கறுப்பு எறும்புகளை பிடித்து போட்டு அப்பாத்திரத்தை மூடி விட்டாள். இந்த எறும்புகளுக்கு எப்படி அம்மையப்பன் உணவு அளிக்கிறார் என்பது அவளது எண்ணம். அடுத்த தினம் உமையன்னை சிவபெருமானிடம், " ஸ்வாமி, நேற்று எல்லா ஜீவராசிகளுக்கும் படியளந்தீர்களா?" என்று கேட்டாள்.



'அகிலநாயகி தன்னோடு விளையாடுகிறாள்' என்பது ஆடல் வல்லானுக்குடத் தெரியாதா?. புரிந்தவர், புரியாமல் கேள்வியின் நாயகனாய், உன்னால் பாத்திரத்தில் சிறைவைக்கப்பட்ட எறும்புகளைப் பார்த்திருந்தால், இந்தக்கேள்வியே இப்போது எழுந்திருக்காது என்றார்.

உமையன்னை, ஓடிச் சென்று தான் எறும்புகளை வைத்திருந்த பாத்திரத்தைத் திறந்து பார்த்தாள். எறும்புகள் சுறு சுறுப்பாக பாத்திரத்தில் உள்ளே வலமிட்டு கொண்டிருந்தன , அத்துடன் சில அன்னப் பருக்கைகளும் கிடந்தன. அதைக் கண்டு வீணாக சிவபெருமானை சந்தேகப்பட்டு விட்டோமே என வருந்தினாள்.

சிவபெருமான் குறும்பானா புன்முறுவலுடன், உமையன்னையிடம் உனது சந்தேகம் தீர்ந்ததா இப்போது? என்று கேட்டு விட்டு, சரி, சரி கணேசன் உன்னைத் தேடிக் கொண்டிருந்தான் போய்ப்பார் என்றார்.



கணேசனை பார்க்க சென்ற உமையவளுக்கு அதிர்ச்சி. களையிழந்த முகமும், ஒட்டிய வயிறும் என இருந்தார் கணேசன்.

தன்னை அதிர்ச்சியுடன் பார்த்த அன்னையிடம், " ஏன் அம்மா அப்படி பார்க்கிறீர்கள். அனைத்துக்கும் காரணம் தாங்கள் தான்! " என்றார் கணேசன்.

உமையவளுக்கு அதிர்ச்சி .."என்ன சொல்கிறாய் நீ ?" என்றாள் .

அகிலாளும் அம்மையப்பனின் நித்திய தர்ம பரிபாலனத்தில் ஐயமுற்றது தங்கள் முதல் குற்றம். அடுத்தது, அப்பாவி எறும்புகளை பட்டினி போடும் விதம் சிறையிட்டது. தாயின் பழி தனயனுக்கு. ஆக எறும்புகளின் பசியை நான் ஏற்றுக்கொண்டு தாங்கள் எனக்களித்த அன்னத்தை,எறும்புகளுக்கு இட்டேன். பட்டினி கிடந்ததால், எனது வயிறு சிறுத்துப் போனது என விளக்கி முடித்தார் கணேசன்.



கண் கலங்கிய உமையவள் கணேசனை அழைத்துக் கொண்டு சிவனிடம் சென்று , " எம் பெருமானே என்னை மன்னியுங்கள். நான் செய்த பிழைக்கு நம் பிள்ளையை வதைக்க வேண்டாம்!" என்று மன்றாடினாள்.


கலக்கமடையாதே தேவி..! என்பால் பக்தி நம்பிக்கை கொள்வது என்பது சற்றும் குறைவில்லாததாக இருக்க வேண்டும். அந்த நம்பிக்கைக்கு இணையான பூஜையோ வழிபாடோ கிடையாது. இதை உலகமறிய நடந்ததே எமது இந்த திருவிளையாடல்.

அகிலத்துக்கு உணவளிக்கும் அன்னையான நீ, உன் பிள்ளைக்கு அன்னம் அளித்தாய். அவன், அதை எறும்புகளுக்கு வழங்கினான். பிள்ளை அவன் பெருமையைப் போற்றும் வகையில், அவை இனி பிள்ளையார் எறும்புகள் என்றே அழைக்கப்படட்டும் என்று அருளினார்.

அகிலத்துக்கு உணவளிக்கும் அன்னையான நீ, உன் பிள்ளைக்கு அன்னம் அளித்தாய். அவன், அதை எறும்புகளுக்கு வழங்கினான். பிள்ளை அவன் பெருமையைப் போற்றும் வகையில், அவை இனி பிள்ளையார் எறும்புகள் என்றே அழைக்கப்படட்டும் என்று அருளினார்.

பின்னர் சிவபெருமான் உமையவளிடம், "எறும்பு உண்டது போக, மீதமுள்ள அன்னப் பருக்கைகளை கணபதிக்குக் கொடு !" என்று கூறினார். அந்த அன்னப்பருக்கைகளை உண்ட கணபதியின் பசியும் தீர்ந்ததுடன், அவரது வயிறும் பழைய நிலைக்குத் திரும்பியது. இந்த திருவிளையாடல் நடந்த தேய்பிறைசதுர்த்தி திதி நாளே கணபதிக்கு உகந்த சங்கடஹர சதுர்த்தி என்பது வழி வழியாக வரும் கர்ணபரம்பரைக் கதை.

எறும்பு என்றாலே கடிக்கும். ஆனால் இந்த கறுப்பு எறும்புகள் யாரையும் கடிப்பதில்லை. பிறர்க்கு துன்பமிழைக்காத நற்குணம் கொண்ட இந்த எறும்புகளை சாமி எறும்புகள் என்றும் பிள்ளையார் எறும்புகள் என்றும் அழைக்கிறோம்





# சலவை

கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

ஞாயிற்றுக்கிழமை காலை. மகள்களிடமிருந்து வரப்போகும் தொலைபேசி அழைப்பிற்காகக் காத்திருந்தார்கள் சலவை வேட்டிச் செட்டியாரும் அவர் மனையாளும்.

வீட்டிலிருக்கும் பொழுதுகளில் கூட வேட்டி கட்டியே பழகியவர் என்பதாலும், அவர் கட்டும் வேட்டி சலவை செய்திருக்க வேண்டுமென்று அவர் விரும்புவதாலும் ஊருக்குள் அவருக்கு சலவை வேட்டிச் செட்டியார் என்ற பெயர் பதிவாகிப் போனது. வையாபுரி எனும் சலவைத் தொழிலாளியின் குடும்பம், செட்டியார் வீட்டு உடைகளைத் துவைத்து சலவை செய்து எடுத்து வருவது நெடுநாள் பழக்கம்.

இவர்கள் வீட்டுக்கு மட்டுமல்ல அந்த ஊரில் பல வீடுகளுக்கும் வையாபுரி குடும்பம் தான் துணிகள் துவைத்து சலவை செய்து வருகின்றார்கள், இது எழுதப்பாடாத ஊர் வழக்கம்.

செட்டியாரின் மகள்கள் இருவரும் மேற்படிப்பிற்காக அமேரிக்காவில் வசித்து வருகின்றனர். ஓராண்டு இடைவெளியில் பிறந்தவர்கள் இரு மகள்களும்.

மகள்களுடன் அடிக்கடி தொலைபேசித் தொடர்பு இருந்து வந்தாலும் ஞாயிற்றுக்கிழமை உரையாடல் சற்று அதிக நேர நடக்கும், காரணம் மகள்கள் வசிக்கும் நாட்டில் அது சனிக்கிழமை இரவு நேரம், மேலும் அது மகள்களுக்கு விடுமுறை நாள் இரவு என்பதால்.

"ஏங்கிறேன் இன்னிக்கி கண்டிப்பா சொல்லிருங்க, இந்த லீவுக்கு ஊருக்குத் தான் வரணும்னு", என்றார் ஆச்சி செட்டியாரிடம்.

"என்னமோ நாஞ் சொல்லுறத கேக்குற மாதிரியில்லசொல்ற...அவுக சொல்லுக்குத் தானே அஞ்சு வருசமா ஆமாம் போட்டுக் கிட்டிருக்கேன்..." என்றார்செட்டியார்.

மகள்கள் பள்ளிக்கூடம் முடித்து கல்லூரிப் படிப்பு தொடங்கிய சில நாட்களிலேயே சுயமுடிவு எடுக்கத் தொடங்கிவிட்டனர். இது அவர்கள் காலம், அவர்களுக்கு நல்லது எது மற்றது எது என்று தெரியும் என்று ஆத்தாளும் அப்பச்சியும் இருந்துவிட்டார்கள்.

காலப்போக்கில் ஆத்தா அப்பச்சி இருவரும் கனவு காண்பது கூட மகள்களின் சொற்படி என்றாகிப் போனது.

"நாஞ்சொல்றத மட்டும் கேட்ருவாகளாக்கும்... என்னகாலமோ...நாம நம்ம ஆத்தா அப்பச்சிக்கு கட்டுப்பட்டதெல்லாம் இப்ப இதுகளுக்கு கேலியாஇருக்கு", என்று தன் மக்களை சொல்லிக் கொண்டே ரெண்டாங்கட்டுக்கு நடந்தார் ஆச்சி.

"என்னங்கறேன்...", ரெண்டாங்கட்டிற்கு நடந்த ஆச்சி, செட்டியாரின் என்னங்கறேனுக்கு திரும்பி வளவிற்குள் நடந்தார், "என்ன..."

"அதுக்காக சும்மா விட முடியாதுல்ல. கண்டிப்பா சொல்லிப்பாப்போம் போன் வரட்டும்", என்று சொல்லிச் சிறு தயக்கத்துடன் இடைவெளி விட்டுத் தொடர்ந்தார், "இன்னொன்னு... எங்க ஆச்சி ரெண்டு வாரமா எங்கிட்ட பேசிக்கிட்டிருக்காக நான் தான் இப்ப ஒங்கிட்ட சொல்றேன்", என்று செட்டியார் தயங்கித் தயங்கிச் சொன்ன போதே இல்லத்தரசி முடிவு செய்துவிட்டார் அது கல்யாணத்தாக்கல் தான் என்று. இருந்தாலும் வெளிக்காட்டாமல் பொய்யாக, "என்ன... உங்க ஆச்சி மகனுக்கு தொழிலுக்கு பணம் தேவைப்படுதா?"

"அட அவன் தொழில் தான் நல்லா நடக்குதே... நம்மட்ட பணத்துக்கா வரப்போறா எங்க ஆச்சி?"

"ஏன்..ரெண்டு வருசத்துக்கு முன்னாடி தொழில்ல நொடிச்சு கடனுக்கு வட்டி கட்ட முடியாம சிரமப்படலியா?"

"அடஅதுபழையகதை... அதை ஏன் இப்பக் கிளறுற... தொழில்னா முன்னப்பின்ன இருக்கத்தான் செய்யும்... கைசுட்ருச்சுன்னு அடுப்புல வேலை பாக்காம இருந்துருவியா நீ? அப்படிதான்... அதுவும்போக... தொழில் செஞ்சு வளந்தது தான் நம்ம குலம்."

இதைக் கேட்டுச் சலிப்படைந்தார் இல்லத்தரசி, "சரிசரி... புராணம் இப்ப வேண்டாம்... என்னவாம் உங்க ஆச்சிக்கு? அதைச் சொல்லுங்க."

"உனக்கு சம்மதம்னா நம்ம பெரியவளை எங்க ஆச்சி மகனுக்கு செய்யச் சொல்றா?", என்றார் படீரென்று.

"அதானே கேட்டேன்... இங்கபாருங்க... உங்க ஆச்சி மகன்னு இல்ல, யாரா இருந்தாலும் தொழில் செய்ற பையன்வேண்டாம்... இன்னக்கி தொழில் நல்லாருக்கும்... நாளைக்கு என்னவாகும்னு சொல்லமுடியாது... அதுனால வெளிநாட்ல செட்டில் ஆன பையனா இருக்கணும் அதுதான் நமக்குத் தோது?"

"அப்படிச் சொன்னா எப்படிங்கறேன்... தொழில்ல இன்னிக்கி நூறு ரூவா வருமானம் இருக்கும் நாளைக்கே அது ஆயிரமா வளரும் நினைச்சதவிட பெருசா செட்டில் ஆகலாம். கை நீட்டி வாங்குற சம்பளம் அப்படியில்ல", என்று தொழிலின் மகத்துவத்தை இரண்டு சொற்களில் எடுத்துச் சொன்னார் செட்டியார்.

"ஆமாமா... அதே ஆயிரம் பின்னாடி நூறாகவும் வாய்ப்பிருக்கு..." என்று முகத்தைத் திருப்பினார் இல்லத்தரசி. சொல்லிக் கொண்டிருக்கும் போதே செட்டியாரின் சாம்சங் போன் கந்தர் சட்டிக்கவசம் முதல் வரி பாடியது. செட்டியார் அதைத்தான் ரிங்டோனாக வைத்திருக்கிறார். இரண்டாம் வரி தொடங்கிய சில நொடிகளில் பட்டென அழைப்பை ஏற்றார் செட்டியார், கந்தர்சட்டிக் கவசம் டக்கென நின்றது (எப்பப்பாத்தாலும் முதல் ரெண்டு வரியை மட்டும் பாடவிடுகிறாயே என்று முருகக்கடவுள் கூட வந்திறங்கிக் கேட்கலாம் என்றிருக்கிறார்).

தொலைபேசியில் அழைத்தது வையாபுரி, அழைப்பை ஏற்று போனைக் காதில் வைத்தார் செட்டியார், "ஹலோ.."

"ஐயா நான் வையாபுரி பேசுறேன்..."

"சொல்லுப்பா... என்ன?"

"ஐயா வீட்டில இருக்கீங்களா... உங்களையும் ஆச்சியையும் பாக்கவரலாமா?"

"என்ன திடீர்னு... நல்லாவா... நாங்க வீட்டுல தான் இருக்கோம்"

"ஐயா, என் மகனுக்கு கல்யாணம் வச்சிருக்கேன். பத்திரிகை குடுக்க வரணும். அதான்...", என்றார் வையாபுரி.

"ரொம்ப நல்லது... வா நாங்க இருக்கோம்", என்று செட்டியார் சொல்ல தொலைபேசி அழைப்பு நிறைவடைந்தது.


தொலைபேசி உரையாடலை தன் துணைவியாருக்குக் கடத்தினார் செட்டியார், "வையாபுரிவாரானாம்... மகனுக்கு கல்யாணம் வச்சிருக்கானாம் பத்திரிகை குடுக்கவாரானாம்."

"வரட்டும்வரட்டும்..." என்று விட்டு தனது ரெண்டாங்கட்டுப் பயணத்திற்குத் திரும்பினார் துணைவியார். மீண்டும் கந்தர்சட்டிக்கவசம், இந்த முறை மகள்களாகத் தான் இருக்க வேண்டும் என்ற முடிவில் மீண்டும் ரெண்டாங்கட்டுப் பயணத்தை ஒத்திவைத்தார் துணைவியார்.

அழைப்பை ஏற்றார் செட்டியார். சின்ன மகள் தொடர்பில் வந்தாள், "ஹைஅப்பா..."

"என்னடா கண்ணுநல்லாருக்கியா?"

"நல்லாருக்கேன்பா, அம்மா என்னபன்றாங்க..."



"இந்தா இங்கதான் இருக்கா... அக்கா அப்படி இருக்கா?"

"என்னமோ நாள் கணக்கில பேசாத மாதிரி அக்காவைக் கேட்கறீங்க... நேத்துதானே பேசினோம்."

"இருந்தாலும்... கண் காணாத தூரத்துல இருக்கீங்க... ஒவ்வொரு நொடியும் உங்க நினைப்புதாண்டா..."

அப்பச்சிக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலின் ஊடேபுகுந்த ஆத்தா, அப்பச்சிக்குக் கட்டளையிட்டார், "சும்மா இழுக்கமா... சொல்ல வேண்டியதை நறுக்குன்னு சொல்லுங்க".

"என்னப்பா ... அம்மா என்னமோ சொல்ற மாதிரி இருக்கு?", என்றாள் சின்ன மகள் மறுமுனையில்.

"ஆமாடா, இந்த செமெஸ்டர் லீவுக்கு நீங்க கண்டிப்பா ஊருக்கு வரணும், ஆயா ஐயா, அப்பத்தா ஐயாஎல்லாரையும்பாக்கணும். அவுகளுக்கும் உங்கள பாக்கணும்னு ஆசைஇருக்கு...", என்றார் அப்பச்சி தணிந்த குரலில்

"அப்பா... சும்மா இருங்கப்பா. நாங்க ஏற்கனவே சொன்னபடி இயூரோப் ட்ரிப் முடிவு பண்ணி டிக்கெட் ஸ்டெ எல்லாம் பணம் கட்டியாச்சு.

ஆயா அப்பத்தா ஐயாங்களை எப்ப வேணாலும் நாங்க வந்து பார்த்துக்குவோம். இயூரோப் ட்ரிப் வாய்ப்பு கிடைக்கும் போது தான் போக முடியும்... சோ நோ சேஞ்ஜ் இன் அவர் பிளான்..." என்று அக்காவும் தங்கையும் சேர்ந்து எடுத்த முடிவில் கண்டிப்பாக இருந்தாள் சின்னமகள்.

தொலைபேசி உரையாடல் ஏறக்குறைய ஒரு மணி நேரம் தொடர்ந்தது. உரையாடல் நிறைவடைந்த அடுத்த நொடி முகப்புக்கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டது. "வையாபுரியாத்தான் இருக்கும்..." என்று சொல்லிக் கொண்டே முகப்பு நோக்கி நடந்தார் செட்டியார். செட்டியாரைத் தொடர்ந்தார் துணைவியார்.

வையாபுரி சலவை வேட்டி மற்றும் அரைக்கை வெள்ளைச் சட்டையிலும், வையாபுரியின் மனைவி இளநீலநிறத்தில் பட்டுப் புடவையிலும் நின்றிருந்தனர். கைகளில் பைகளும், பைகளுக்குள் பழங்களும் கல்யாணப் பத்திரிகைகளுமாகக் காட்சியளித்தனர் வையாபுரி தம்பதியினர்.

"உள்ளேவாங்க..." என்று இருவரையும் வரவேற்றார் செட்டியார்.

வீட்டினுள் நுழைந்த வையாபுரி தம்பதியினர் முகப்பிலேயே நின்றனர். "உள்ளவாப்பா..." என்றழைத்தார் செட்டியார்.

"ஐயா இல்லைங்க... இப்படி இங்கயே நிக்கிறோம், நீங்க உட்காருங்க", என்று முகப்புத் திண்ணையைக் கை காட்டினார் முகப்பில் நின்றவாறே வையாபுரி பணிவாக.

"அட.. சும்மா வாப்பா", என்றார் ஆச்சி.

"இல்லங்க ஆச்சி... பத்திரிகை மட்டும் குடுத்துட்டு கிளம்பறோம்", என்றார் வையாபுரியின் மனைவி தூணோரம் நின்றபடி.



"சரிஉட்காருங்க... நான் போயி குடிக்க ஏதாவது கொண்டாறேன்", என்று உள்ளே சென்றார் ஆச்சி.

தூண்களில் ஒன்றை பைகளுக்கு ஆதரவாக்கி விட்டு. ஒரு பையிலிருந்து அகலமான புதிய எவர்சில்வர் தட்டை வெளியில் எடுத்தார் வையாபுரி. இன்னொரு பையிலிருந்து ஆரஞ்சு ஆப்பிள் பழங்களை எடுத்து அடுக்கி பழங்களின் மீது திருமணப் பத்திரிகையை எடுத்து வைத்து செட்டியாரிடம் நீட்டினார் வையாபுரி.

திண்ணையில் அமர்ந்திருந்த வண்ணம் பெற்றுக் கொண்டார் செட்டியார். வையாபுரிக்கும் அவர் மனைவிக்கும் நன்னாரி சர்பத்தை தட்டில் கொண்டு வந்து நீட்டினார் ஆச்சி.

பெற்றுக் கொண்ட இருவரும் சர்பத்தை ஒரே மடக்கில் குடித்து முடித்து முகப்பு வாசலில் நிறுவியிருந்த குழாயில் தண்ணீரைத் திறந்து தம்பளர்களைக் கழுவி எடுத்து வந்து திண்ணையில் ஒரு தூணோரம் வைத்தனர் வையாபுரி தம்பதியினர்.

"ஏன் வையாபுரி... உன் மகன்வெளிநாட்டில் தானே வேலை பார்த்தான்", என்றார் செட்டியார் பத்திரிகையைப் புரட்டியபடி.

"ஆமாங்கய்யா... ஆனா இப்ப ஒண்ணரை வருசமா இங்க தான் இருக்கான்..."

"ஓ... வெளிநாட்டில் செட்டில் ஆகியிருந்தா இன்னும் நல்லா இருந்திருக்கலாமே?", என்று கூறிக் கொண்டே பத்திரிகையை பத்திரமாகத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டார்.



quirkywanderer.com

"ஆமாங்கய்யா... நாங்களும் சொல்லிப் பார்த்துட்டோம்... நாலு வருஷம் வெளிநாட்டில் இருந்து சம்பாதிச்சதுபோதும், சம்பாதிச்ச காச முதலாப் போட்டு உள்நாட்டில் தொழில் தொடங்குறென்னு சொல்லிஆரம்பிச்சான்... தொடக்கத்துல கொஞ்சம் சிரமம்தான்... ஆனா அவன் விடாப்பிடியா தொட்ட தொழிலை ராப்பகலா முயற்சி பண்ணினான் இப்பக்கேட்டா தொழிலைப் புடிச்சுட்டேன் இனி வளர்ச்சி தான்னு சொல்றான்."

வியப்புடன் கேட்டார் செட்டியார். "அப்படி என்னப்பா தொழில் செய்றான்?"

"ஆரம்பத்தில லாண்டரி கடை ஒன்னுவச்சான்... சரியாப் போகல... பிறகு பெரிய தங்கும் விடுதியொண்ணுல லாண்டரி காண்ட்ராக்ட் எடுத்தான். ஆரம்பத்தில கைக்கு எதுவும் கிடைக்கல.

வருமானம் இல்லாம ஏண்டா சிரமப்படுற மறுபடி வெளிநாட்டுக்கு போனா என்னண்ணு நாங்களும் திட்டினோம். விடாப்பிடியா தொழில் தாண்ணு இருந்தான். வேறொரு தங்கும் விடுதி யொண்ணுல கான்டராக்ட் மாத்துனான் அது கொஞ்சம் ஆதரவு கொடுத்துச்சு. அங்க இருந்து அடுத்து அடுத்ததுண்ணு இப்போ மூணு அஞ்சு நட்சத்திர தங்கும் விடுதியில காண்ட்ராக்ட் வச்சு நடத்துறான். ஒவ்வொரு இடத்துலயும் நாலஞ்சுபேருன்னு சம்பளத்துக்கு ஆளை போட்டு பார்த்திட்டிருக்கான்", என்று வையாபுரி சொல்லி முடிக்க அவரது மனைவி தொடர்ந்தார், "ஐயா ஆச்சியையும் கூட்டிகிட்டு அவசியம் கல்யாணத்துக்கு வந்துடுங்க... நாங்க இன்னும் செட்டியாருங்க வீடுகளுக்குப் போய் பத்திரிகை குடுக்கணும்", என்றார்.



quirkywanderer.com

"வந்து சொன்னதுக்கு மகிழ்ச்சி வையாபுரி... கல்யாணம் நல்லா நடக்கும் நாங்களும் வாரோம்", என்று வாழ்த்தினார் செட்டியார். ஆச்சியும் உடன் வாழ்த்தினார்.

வையாபுரியும் அவர் மனைவியும் படியிறங்கிச் சென்றதும் முகப்புக் கதவை சாத்தி விட்டு வந்த ஆச்சி செட்டியார் அருகில் வைத்திருந்த கல்யாணப் பத்திரிகையை கையிலெடுத்துப் பார்த்து மலைத்தார்.



அட்டைப்பகுதி தொட்டுப் பார்க்க பட்டு போல இருந்தது. பல வண்ணங்களில் கடுகளவுக் கண்ணாடி உருண்டைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பத்திரிகையைப் புரட்டினால் ஒவ்வொரு பக்கமும் ஓவியமும் கைவினை வேலைகளும் பத்திரிகையின் தரத்தை பறைசாற்றியது.

வைத்த கண் வாங்காமல் கைகளால் தடவிப் புரட்டிப் பார்த்தார் ஆச்சி. பத்திரிகையின் கலை நயமும் பலவித அலங்காரமும் அவர் மனதைக் கிறங்கடித்தது. "என்னங்க இது கல்யாணப்பத்திரிகை இவ்வளவு ஓவியமா இருக்கு?"

"தொழில் பண்ணி வளந்தவனோட கல்யாணப் பத்திரிகை இப்படித் தான் இருக்கும்", என்று எதார்தமாகச் சொல்லிவிட்டு முகப்புத் திண்ணையிலிருந்து எழுந்த செட்டியார் வேட்டியை இடுப்பில் இறுக்கிக் கட்டிக்கொண்டு வளவுக்குள் நுழைந்தார்.

பத்திரிகையின் பகட்டால் பார்வை மாறி ஏறிய புருவங்கள் இன்னும் இறங்கவில்லை ஆச்சிக்கு.

நீங்கள்
உங்கள் கனவை
உருவாக்கவில்லை
என்றால், வேறு
ஒருவருடைய கனவுக்கு
நீங்கள் வேலை
செய்ய வேண்டியது
வரும்




# வல்லவர்



–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

அ ரசியல் நேர்மை காத்தவர்
ஆ சை அனைத்தும் துறந்தவர்
இ ன்பம் பொங்க வாழ்விலே
ஈ தல் வழக்கம் கொண்டவர்
உ ழைப்பு ஒன்றே உயர்வெனவே
ஊ ழல் அறியாத உத்தமர்
எ ண்ணும் எழுத்தும் கண்ணெனவே
ஏ ழைக்கு எழுத்து அறிவித்தவர்
ஐ ம்புலன் அடக்கி வாழ்ந்தவர்
ஒ ழுக்கம் உயிரென ஓம்பி
ஓ ய்வில்லாது பணி செய்தவர்
ஔ வை வழி நடந்து
எ ஃ கின் உறுதி கொண்டவர்
அஃதே
காமராசர் என்னும் வல்லவர்





# வாங்க பேசலாம்..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி – 14

– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!



## ரவைக்கு (இராவைக்கு)

"ஆத்தா! ஊருலருந்து ரவைக்குள்ள வந்திருவியா? காலங்கெட்டுக் கெடக்கு" என்ற தொடரில் ரவை என்பது இரவைக் குறிக்கிறது. இரவு – இராவு – இராவு+ கு = இராவுக்கு என்கிறாகிறது. இரா என்பதை நம்மவர்கள் பேச்சு வழக்கில் ரவை என்கின்றனர்.

## இருசி

குழந்தை பிறக்காத பெண்களை இவ்வாறு அழைப்பர். மலடி என்பது பொருள். குழந்தை பிறக்காத ஏக்கத்தில் ஒரு பெண் பாடுகிற பாட்டில் இவ்வட்டார வழக்குச் சொல் பயன்படுத்தப்படுகிறது. அப்பாடல் வரிகள்...

"குங்குமத் தொந்தியிலே
குழந்தை பிறக்கலயே....
மந்திரிமார் பெத்தமக
மலடி எனும் பேரானேன்
இந்திரனார் பெத்த மக
இருசி யெனும் பேரானேன்."

## இருமுரடன்

"இலுப்பக்குடி கணேசனா! அவன் இருமுரடனாச்சே! அறிவில்லாம, புரியாமப் பேசுவானே" என்ற அங்கலாய்ப்பில், உள்ள இருமுரடன் என்பது பெரிய முரடன் அல்லது முரட்டுக் குணம் கொண்டவன் என்ற பொருள்களைத் தரும்.

## இலை போடுதல்

"ஐயா! பேராண்டி, பந்தியில இலை போட்டாச்சான்னு பாருய்யா!" உணவுக்கு இலைக் கலம் இடுதல் என்பதை இலை போடுதல் என்றழைப்பர்.



## இலை எடுத்தல்

"சாப்பிட இன்னும் நிறைய பேரு இருக்காக. சீக்கிரமா. இலையை எடுங்க" என்பதில், இலையை எடுத்தல் என்பது உணவு உண்ட பின், எச்சில் இலையை எடுத்து தூய்மைப் படுத்துதல் என்ற பொருளைத் தரும்.

## இழவு சொல்லுதல்/ இழவு வீடு

"அப்பச்சி! பங்காளிகளுக்கெல்லாம் எழவு சொல்லியாச்சா?" என்ற வரிகளில், இழவு என்பதே எழவு என்று பேச்சு வழக்கில் சொல்லப்படுகிறது. சாவு அறிவித்தலே இழவு சொல்லுதல் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. இழவு – இழப்பு.

"வீடா இது! எழவு வீடு மாதிரி இருக்கு" என்று சொல்லப்படுவதில், இறந்தவர் இருக்கும் வீடு அமைதியாக இருக்கும். அது போல் அமைதியாக ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாத இடங்களில் இவ்வார்த்தைகளைப் பயன்படுத்துவர்.

## இழுத்தடித்தல் (இழுக்கடித்தல்)

"எத்தனை தடவை இந்தப் பட்டுக்கிடப்பான் வீட்டுக்கு வர்றது. இப்படி இழுத்தடிக்கிறானே?" என்று கொடுத்த காசை கேட்க அலையும் நம்மவர்கள் பயன்படுத்தும் வார்த்தை இழுத்தடித்தல். இழுக்கடித்தல் என்பதே இழுத்தடித்தல் என மருவி வழங்கி வருகிறது. அலைய வைத்தல் என்பதன் வேறு வார்த்தையே இழுக்கடித்தல் என்பது.

## இளக்காரம் (எளக்காரம்)

"நம்ம குடும்பத்த பாத்தாலே தெக்கூரு தெய்வராயனுக்கு எளக்காரமாத்தான் இருக்கு" என்று பேச்சு வாக்கில் சொல்லப் படுகின்ற இளக்காரம் என்னும் சொல்லுக்கு தாழ்நிலை என்று பொருள் கொள்ளலாம். உரிய நிலையிலிருந்து தாழ்வாகப் பிறர் எண்ணுவதை இளக்காரம் எனலாம்.



"இராமாயணத்தில், சடாயு வீழ்ந்துகிடப்பதைக் கண்ட இராமன்,
வண்ணமான் சீதையை நீக்கினேன்–நானும் ஒருசே
வகன்போல வில்லும் தூக்கினேன்–ஐயோ இப்போதென்
கண்முன்னே உன் னையும் போக்கினேன்–மரமீதேறி
கைவிட்டோன் போல்என்னை ஆக்கினேன்–நான் செய்வேன்
எண்ணின எண்ணமெல்லாம்போய் இளக்காரமாய்த் தளர்ந்தேன் "

என்று இராமநாடகக் கீர்த்தனையில் வரும் பாடல் வரிகளில் தன்னைத் தாழ்ந்து, தளர்ந்து போனதைப் பாடுவதாக அமையும் பாடல் வரிகளால் உணரலாம்.

## இளங்குழம்பு



"தம்பி! இளங்குழம்பு இருக்கா? ரசம் இருக்கா? என்று பந்தியில் பரிமாறுபவரை இன்றும் பலர் கேட்பதுண்டு". இக்குழம்பு நம்மவர்கள் மட்டுமே தயார் செய்யும் குழம்பு என்ற பெருமைக் குரியது. ரசத்திற்கும் குழம்பிற்கும் இடைப்பட்ட ஒரு வகையே இந்த இளங்குழம்பு எனலாம். தண்ணி குழம்பு என்றழைப்பதும் உண்டு.

## இளந்தாரி (எளந்தாரி)

" இளந்தாரிப் பயலுகளா ஒண்ணாச் சேந்து போரீக! பாத்து பதவிசா போய்டு வாங்க. ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆச்சுன்னா அம்மான்னாலும், ஆத்தான்னாலும் முடியாது" என்று பேரன்களிடம் ஐயாக்கள் கண்டித்து சொல்வதில் உள்ள இளந்தாரி என்பது இளைஞர்களைக் குறிக்கும். (இளம் – இளந்தை – இளந்தரன் – இளந்தாரி)

## இளிச்சவாயன்



"அந்தக் குமரேசன இன்னக்கி காரக்குடியில பாத்தேன். சரியான இளிச்ச வாயா இருக்கான். ஏமாந்தது கூட தெரியாதவனா இருக்கான்." இங்கு இளித்த வாயன் என்பது எளிதில் ஏமாற்றப்படுபவன் எனப் பொருள் தருகிறது.

**இளைத்தல்**

"என்ன தம்பி! வாட்ட சாட்டமா இருப்பீக! ஒரே வருசத்துடன் இப்படி இளச்சுப் போய்ட்டீகளே?" என்ற இந்த அக்கறையான விசாரிப்பில், இளைத்தல் என்பது மெலிதல் என்ற பொருளைத் தருகிறது.

திருவாசகத்தில், மாணிக்கவாசகர்,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்."

பலரும் அறிந்த இப்பாடலில் பாடுவதின் மூலம் அச்சொல்லின் பொருளை அறியலாம்.

– தொடர்ந்து பேசுவோம்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar
Join Telegram

பெண் கதவு... ஆண் பூட்டு..! – 14

# இருப்பதைக் கொண்டு திருப்தி



நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

பெண் பார்க்க கிளம்பினான் ரமேஷ், உடன் அம்மா, அப்பா, நண்பன் சுரேஷ், அவர்கள், பெண் வீட்டு வாசலில் வந்து மகிழுந்தில் இறங்கும் போது ஊரே கூடி நின்று வேடிக்கைப் பார்த்தது.

"ஏய். மாப்ள ரொம்ப அழகா இருக்காருடி..மணிமேகலை கொடுத்து வச்சவ.." வரவேற்பு பலமாக, உள்ளே சென்று அமர்ந்தார்கள்.

"என்ன சாப்பிடுறீங்க," பெண்ணின் அப்பா கேட்க. . உடனே ரமேஷின் அம்மா "அவனுக்கு காபின்னா ரொம்ப பிடிக்கும்" என்றாள். ரமேஷ் அம்மாவை மெதுவாகக் கடிந்து கொண்டான்.

ரொம்ப நல்லதாய் போச்சு, பொண்ணோட கையால காபி கொடுக்கச் சொல்வோம் எனக் கூறிவிட்டு உள்ளே பெண்ணை அழைக்கச் சென்றார்.

காபி தட்டோடு மணிமேகலை வந்தாள். ரமேஷின் கவனமெல்லாம் தட்டில் இருந்த காபியிலேயே இருந்ததால், வேகமாக எடுத்துப் பருகத் தொடங்கினான். மணிமேகலையின் மீது கவனம் இல்லை.



பெண்ணின் அம்மா ""எம் பொண்ணு காபி போட்டான்னா ஊரே மணக்கும்" எனக் கூற "என்ன மாப்ள காப்பி பிடிச்சிருக்கா" என பெண்ணின் அப்பாவும் "என்ன தம்பி பொண்ண பிடிச்சிருக்கா" என பையனின் அப்பாவும் ஒரே நேரத்தில் கேட்க.
"ரொம்ப பிடிச்சிருக்கு" என பெண்ணை சரியாகப் பார்க்காமலேயே மெய் மறந்து கூறினான் ரமேஷ்.

திருமணம் நடந்தது, முதலிரவில் ரமேஷ் மணிமேகலையிடம் "பெண் பார்க்க வந்த அன்று எனக்கு சுவையான காபி போட்ட, இந்த கைக்கு முத்தம் கொடுக்கலாம்னு நினைச்சேன், ஆனால் உங்கப்பா திட்டுவாரோன்னு பேசாம இருந்துட்டேன்" என்றான்.



"நீங்க முத்தம் கொடுத்திருந்தா எங்க அப்பா கைக்குத்தான் கொடுத்திருக்கணும் – ஏன்னா காபி போட்டதே அவருதான்" என்றாள். கோபம் தலைக்கேற "உங்கம்மா நீ போட்டதா ஏன் பொய் சொன்னாங்க" எனக் கேட்க. "அதைச் சொல்லச் சொன்னதே உங்க அப்பாவும் அம்மாவும் தான், எனக்கு சமையல்னா என்னன்னே தெரியாது. அடுப்பக்கூட பத்தவைக்கத் தெரியாது என உண்மையைப் போட்டுடைத்தாள், மணிமேகலை. ரமேஷின் மனம் மண்பானையைப் போல் நொறுங்கியது.

மகிழ்ச்சி குடிபுகும் இடத்தில் கோபம் குடியேறியது. . "காப்பிக்கு ஆசைப்பட்டு கருப்பியை மனைவியாகக் கொண்டுவந்து விட்டோமே அவசரப்பட்டு" என அவளிடம் பேசுவதைத் தவிர்த்தான், முற்றிலும் புறக்கணித்தான். பேச மறுத்தான். முதலிரவு துக்க இரவாக மாறியது, அதன்பிறகு அவனை மாற்றுவதும், வாழ்க்கையை இனிமையாக்குவதும் அவளின் கையில் தான் இருந்தது செய்தாள். அவனுக்கு மிகவும் பிடிக்கும் காபியை முதலில் கற்றுக்கொண்டாள். இதற்காக அவளுடைய அப்பா, இரண்டு நாட்கள் வந்து தங்க வேண்டியிருந்தது. அதன் பிறகுசமையலைத் தன் மாமியாரிடம் கற்றுக் கொண்டதோடு, அவனுக்கு என்ன பிடிக்கும் என்று தெரிந்துக் கொண்டு பார்த்து பார்த்து செய்தாள். வெறுமை உற்ற ரமேஷின் மனது அமைதி உற்றது. படிப்படியாக தன் கவனத்தை மனைவியின் மீது திருப்பினான். இந்த காபி பிரச்சனையால் 'குவா குவா' ஒரு மாதம்தான் தள்ளிப்போனது. அதன் பிறகு வீடே இன்பத்தால் நிறைந்தது.



இப்பொழுதெல்லாம் ரமேஷ் தன் நண்பர்களிடம் பெருமையாகக் கூறுவது இதைத்தான். "மனைவி என்பவள் அழகாக வெள்ளையாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாதுடா.. நமக்கு தொல்லை இல்லாமல் இருக்கனும்னு எதிர்பார்க்கணும்டா" என்பதே..

இந்த அறிவுரையைக் கேட்டு அவனது இருநண்பர்கள் தொல்லைப்பட்டது வேறு கதை. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் எனச் சொல்வது தவறு. மனைவி அமைவதெல்லாம் சொந்தங்கள் கொடுத்த வரம் என்பதே சரி.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுவதில்லை, சொந்தகாரரர்களால் நிச்சயிக்கப்படுகிறது என்பதே உண்மை. கருப்பான பெண்ணை திருமணம் செய்து கொண்ட மணிவண்ணனைப் பார்த்து அவன் நண்பன் ராகவன் கேட்டான். "ஏண்டா பொண்ண இருட்டுல பார்த்தியா "அவன் சொன்னான்" ஆமாண்டா.. இருட்டுல தான் பார்த்தேன். பெண்ணை காட்டும் போது கரண்ட் போயிடுச்சு அரிக்கேன் விளக்கு வெளிச்சத்துல காட்டுனாங்க, பளிச்சுனு இருந்தா. ஓகேன்னு சொல்லிட்டேன்" என்றான்.

ஆம், திருமணமாகி 2 5 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்று அவர்கள் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து, தன் பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்து, தாத்தா பாட்டி ஆகிவிட்டார்கள். இருப்பதைக் கொண்டு திருப்தி அடைவதே நிறைவான இல்வாழ்க்கை.

நன்றி : ஓவியம்.மோகன் மணிமாலா



# பிள்ளையார் சுழியின் தத்துவம்..!!!

வாக்கு, வளம், செல்வம், தொழிலில் மேன்மை, பெருமை, உருவப்பொலிவு இவையாவும் ஆனை முகத்தானை வணங்குபவருக்கு கிடைக்கும்ன்னு சொல்வாங்க. இப்படி எதை செய்தாலும் ஆனைமுகத்தானை வணங்கி செய்வது நம் வழக்கம். அந்த பழக்கம் செயலில் மட்டுமில்லை. எழுதுவதிலும் உண்டு. எதை எழுதினாலும் பிள்ளையார் சுழி போட்டு எழுதுவது வழக்கம்.



பிள்ளையார் தடைகளை விலக்குபவர் என்பதால், நாம் தொடங்கும் எந்தச் செயலும் தடையில்லாமல் நடக்கப் பிள்ளையாரை வணங்கி அல்லது பிள்ளையார் சுழி – உ போட்டுத் தொடங்க வேண்டும் என்பது வழக்கம்.

இதற்கு பின்னால் இருக்கும் வரலாறு என்ன.? வாருங்கள் இந்தக் கட்டுரையில் பாப்போம்.

தமிழ் உயிர் எழுத்துக்களில், 'உ'கரம் என்ற எழுத்து முக்கியத்துவம் வாய்ந்தது. முன்னொரு காலத்தில் எழுதுவதற்கு காகிதமோ பலகையோ கிடையாது. எதை எழுதினாலும் அதை ஓலைச் சுவடியில்தான் எழுத வேண்டும். அதுவும், எழுத்தாணி கொண்டு எழுத வேண்டிய நிலையில் இருந்தனர், அன்றைய அறிஞர்கள்.



தமிழ் எழுத்துக்கள் யாவும் வலைந்து நெளிந்து இருக்கும். ஒரு சில எழுத்துக்களுக்கு சுழிகள் தேவைப்படும். செம்மை இல்லாத ஓலைச்சுவடிகள் எளிதில் கிழிந்துவிடும் தன்மை கொண்டவை. அதில் எழுத்தாணி வைத்து எழுதும் போது பல முறை தொடக்கத்திலேயே ஓலைச்சுவடிகள் பழுதடைந்து விடும். இதனால் அதை உபயோகிக்க முடியாமல் போகலாம். 'உ' என்ற தமிழ் உயிர் எழுத்தை எழுதும் போது எழுத்தாணியின் கூர்மையும் ஓலைச்சுவடியின் வலிமையும் தெரிந்து விடும்.

இதன் காரணமாகவே நம் முன்னோர் முதலில் 'உ' என்ற எழுத்தை எதையும் எழுதுவதற்கு முன்னர் தொடக்கத்தில் எழுதி வந்தனர் என்று கூறப்படுகிறது..

'ஓம்'ன்றது பிரணவ மந்திரம். இந்த 'ஓம்' என்ற மந்திரத்துக்கு பிறகே எந்தவொரு கடவுளின் பெயரோ அல்லது மந்திரமோ வரும். 'ஓம்' என்பதை அ+உ+ம் என பிரிக்கனும். அதாவது, அ,உ,ம் இந்த எழுத்துகளின் உச்சரிப்பின் கூட்டே 'ஓம்'. இதில் 'அ'என்பது படைத்தலையும், 'உ'என்பது காத்தல் என்பதையும், 'ம்'என்பது அழித்தலையும் குறிக்கும்.

'அ' என்பது வாழ்வின் ஆரம்பத்தை குறிக்கும். 'உ'என்பது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களை குறிக்கும். இந்த ஐம்புலன்களை அடக்கிக் கொண்டால் ஆயுள் கூடும். ஆயுள் கூடக்கூட நம் விருப்பங்கள் தங்கு தடையின்றி நடக்கும். மேலும் 'உ; என்பது காத்தல் எழுத்து என்பதால், இறைவன் நம்மைப் பாதுகாப்பதைக் குறிக்கிறது. நம் செயல்கள் தடையின்றி நடக்க வேண்டுமானால், நமக்கொரு பாதுகாப்பு வேண்டும். இதற்காகவே, 'உ' வடிவத்தை எழுதுகிறோம்.



'உ' என்ற எழுத்து சிறிய வட்டத்தில் தொடங்குகிறது. வட்டத்திற்கு தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை. கடவுள் என்பவர், தொடக்கமும் முடிவும் இல்லாதவர் என்பதை பிள்ளையார் சுழி குறிப்பதாகவும் இதனால் 'உ' என்ற எழுத்தை கடவுளின் குறியீடாக பார்ப்பதாகவும் சிலர் கூறுகின்றனர். மேலும், 'உ' என்ற எழுத்தில் வட்டத்தை தொடர்ந்து வரும் கோடு, வளைந்து பின்னர் நேராக செல்கிறது. இதை 'ஆர்ஜவம்' என்று கூறுவதுண்டு. இதற்கு 'நேர்மை' என்று பொருள்.

"வாழ்க்கையில் வளைந்து கொடு, அதே சமயம் நேர்மையை கைவிடாதே" என்ற தத்துவத்தை உணர்த்தும் வகையில் பிள்ளையார் சுழி இருப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. அதனால், எதை தொடங்குவதற்கு முன்பும் பிள்ளையார் சுழி போட்டு தொடங்குபவர்களுக்கு வெற்றி நிச்சயம் என்பது ஐதீகமாக பார்க்கப்படுகிறது.

"உ" எப்படி பிள்ளையார் சுழி ஆனதுன்னும், இந்த ஒற்றை இனி பார்க்கலாம்.



பிள்ளையார் சுழியை, 'உ' என எழுதும் போது, முதலில் ஒரு சிறு வட்டத்தில் துவங்குகிறது. வட்டத்திற்கு முடிவே கிடையாது. விநாயகரும் அப்படித்தான். அவரை அறிந்து கொள்வது என்பது பிரம்மபிரயத்தனம். வட்டம் என்பது இந்த பிரபஞ்சத்தை குறிக்குது. இதற்குள் பல வித உலகங்களும், வானமண்டலமும் அடங்கியுள்ளது. அதாவது, விநாயகப் பெருமானுக்குள் சர்வலோகமும் அடக்கம். அவரது பெருவயிறும் அதையேதான் காட்டுகிறது. அந்த வயிற்றுக்குள் அவர் சர்வலோகத்தையும் அடக்கியுள்ளார் என்பது நம்பிக்கை.

இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்களும் பிள்ளையார் சுழியிலிருக்கும் நேர்க்கோட்டைப்போல நேர்மையை

கடைப்பிடிக்கனும்ன்னு இச்சுழி உணர்த்துது. அதேப்போல, வியாபாரத்தில் உ பிள்ளையார் சுழி போட்டு அதன்மேல் லாபம்ன்னுஎழுதுவாங்க. இவ்வியாபாரத்தில் கிடைக்கும் லாபம் நேர்வழியிலானதாக இருக்கட்டுமென்பதே இதன் பொருள். முதன் முதலில் எழுத்துவடிவத்தை கொண்டுவந்தவர் பிள்ளையார். எழுத்துவடிவில் தோன்றிய முதல்நூல் வியாச பாரதம்.

அதனால், பிள்ளையார் சுழி போட்டு எதையும் தொடங்குவோம்...

**எனக்கு வேண்டும் வரங்களை**
**இசைப்பேன் கேளாய் கணபதி**
**மனதிற் சலனமில்லாமல்**
**மதியில் இருளே தோன்றாமல்**
**நினைக்கும் பொழுது நின் மவுன**
**நிலை வந்திட நீ செயல்வேண்டும்**
**கணக்குஞ் செல்வம் நூறுவயது**
**இவையும் தர நீ கடவாய்!**



**– பாரதியார்**



# கொடை வள்ளல்

அழிவில்லாத கல்வியை அளவின்றித் தந்தாய்
அதற்கேதும் பெறாமல் இலவசந்தான் என்றாய் .

பள்ளிகள், கல்லூரிகள் மலர்ந்தன நீ தந்த நிலத்தால்
கல்வி நகரமானது காரைக்குடி உன் அன்புக் கரத்தால்

சுயநலத்தை மறந்து இங்கு பொது நலத்தை விதைத்தாய்
சுயசரிதை எழுதாமலே மக்கள் மனதில் நிலைத்தாய்

சிக்ரியை காரைக்குடிக்கு கொண்டு வந்தாய் நல்ல திருப்பம்
நீங்கள் கேட்டதும் மறுப்பின்றி நேரு நிறைவேற்றினார் உங்கள் விருப்பம்

இருந்த வீட்டை மாணவர் விடுதிக்குத் தேவைப்படக் கொடுத்தாய்
ஊருக்கு உதவிட அடுத்தவர் உயர்ந்திட பாரெட்லா படித்தாய்

கொடை வள்ளல் என்ற பட்டம் உனக்கு மட்டும் பொருந்தும்
கொடை தராமல் போட்டுக் கொண்டோர் மனம் ஏனோ வருந்தும்

கல்வியின் துணையாலே எங்கள் வாழ்க்கை என்றும் சிறக்கும்
கல்வி இருக்கும் வரை உங்கள் பெயர் இங்கு நிலைக்கும்

வள்ளல் அழகப்பர் முகம் நம் நெஞ்சில் நிறையாளராய் உலவும்
கல்வி என்ற மூன்றாம் கண் திறந்த கொடையாளராய் திகழும்.



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி



# எந்த வாழைப் பழத்தில் என்ன நன்மை?

அதிகமானோர், காலை உணவை சரிவர எடுத்துக் கொள்வதில்லை, இது முற்றிலும் தவரான செயலாகும். அகவே, காலை உணவோடு சேர்த்து, வாழைப்பழத்தை எடுத்துக் கொள்வது மூலம், அதிக நன்மைகளை பெறலாம். இது நாள் முழுவதும் சுறுசுறுப்பாக செயல்பட வைக்கும்.

இயற்கையாகவே இனிப்பு சுவை கொண்ட பழம் வாழைப்பழம். உலகளவில் ஆயிரக்கணக்கான வாழைப்பழ வகைகள் உண்டு.. அதில் நாம் நாட்டில் அதிகம் தென்படும் வகைகள் என்னென்ன? உடலுக்கு அது செய்யும் ஆரோக்கிய நன்மைகள் என்னென்ன? என்பதை இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.



**பேயன் வாழைப்பழம்:** தமிழ்நாடு வாழைப்பழ வகைகளில் ஒன்று பேயன் வாழைப்பழம். உடலுக்கு மிகவும் குளிர்ச்சி தரும் பழமாக உள்ளது. குடல் புண், மலச்சிக்கலை குணப்படுத்தும். உடல் எடை அதிகரிக்க நினைப்பவரக்ள் தினமும் இந்த பழத்தை எடுத்துக் கொள்ளலாம். இதில் மாவுசத்து அதிகமுள்ளதால் உடல் எடை அதிகரிப்பை கண்கூடாக பார்க்கமுடியும். மேலும் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கச்செய்கிறது.

**மொந்தன் வாழைப்பழம்:** இப்பழத்தில் அதிகளவு மாவுசத்து மற்றும் இரும்புசத்து உள்ளதால் குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. உடல் சூட்டை குறைக்க மொந்தன் வாழைப்பழத்தை தினமும் உணவு பின் எடுத்துக்கொள்வது நல்லது. மேலும் மலசிக்கல், வயிறு இரைச்சல் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு கொடுக்கும்.





**செவ்வாழைப்பழம்:** வைட்டமின் ஏ, வைட்டமின் சி, கால்சியம், இரும்புசத்து, பீட்டாகரோட்டின் உட்பட பல சத்துக்கள் நிறைந்த பழமாக உள்ளது. தோல் சம்மந்தமான பிரச்சனைகளுக்கு தினமும் ஒரு செவ்வாழை சாப்பிட்டு வந்தால் குணமாகும். கண் பார்வை மேம்பட, உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க, நரம்புத்தளர்ச்சி நீங்க தினமும் ஒரு செவ்வாழை எடுத்துக்கொள்ளுங்கள். அதே போல் ஆண்களுக்கு விந்தணுக்கள் அதிகரிக்கவும் செவ்வாழை உதவுகிறது.



**ரஸ்தாளி வாழைப்பழம்:** வாழைப்பழ வகைகளிலேயே அதிக இனிப்பு சுவை கொண்ட பழம் ரஸ்தாளி. இதில் அதிகளவு நார்சத்து உள்ளதால் மலசிக்கல் நீங்க உதவுகிறது. பொட்டாசியம் அதிகளவு உள்ளதால் இது இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும்..




**பூவன் வாழைப்பழம்:** உடலில் செரிமான சக்தியை அதிகரிக்க தினமும் பூவன் பழத்தை உணவுக்கு பின் எடுத்துக்கொள்வது நல்லது. உடல் சோர்வு, தசை வலி நீங்க பூவன் பழம் உதவுகிறது. அதேபோல் சர்க்கரை நோய்யாளிகள், சுவாசப்பிரச்சனை உள்ளவர்கள் இப்பழத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது



**பச்சை வாழைப்பழம்:** அதிக குளிர்ச்சி தரக்கூடிய பழம் பச்சை வாழைப்பழம். குளிர்ச்சி உடலமைப்பு கொண்டவர்கள் இப்பழத்தை அதிகளவு எடுத்துக்கொள்வதை தவிர்க்கவேண்டும். குடல் ஆரோக்கியத்துக்கு இப்பழம் மிகவும் உதவுகிறது.



**நேந்திரம் வாழைப்பழம்:** கேரளாவில் அதிகளவு விளைவிக்கப்படும் பழம் நேந்திரம் வாழைப்பழம். உடல் எடை அதிகரிக்க விரும்புபவர்கள் இப்பழத்தை தினமும் எடுத்துக்கொள்வது நல்லது. இரும்பு சத்து நிறைந்த இப்பழம் இதய ஆரோக்கியத்துக்கும், ரத்த உற்பத்திக்கும் உதவுகிறது.



**கதலி வாழைப்பழம்:** மாவுசத்து அதிகமுள்ள பழம் கதலி வாழைப்பழம். உடல் எடை அதிகரிக்க, மலசிக்கல், குடல் புண், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க கதலி வாழைப்பழத்தை தினமும் எடுத்துக் கொள்வது நல்லது.

## ஒரு நாளைக்கு எத்தனை வாழைப்பழங்களை சாப்பிடலாம்?

பொதுவாக பெரும்பாலான நபர்கள் ஒரு நாளைக்கு 1 முதல் 2 வாழைப்பழங்களை சாப்பிடுவது பரிந்துரைக்கப்படுகிறது. இருப்பினும், சிறுநீரக நோய் முற்றிய நிலையில் உள்ளவர்கள், அதிக பொட்டாசியம் உள்ளடக்கம் காரணமாக வாழைப்பழத்தை உட்கொள்வதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

நிலையான ஆற்றல் மட்டங்களுக்கு, புரதங்கள் அல்லது கொழுப்புகளின் பிற ஆதாரங்களுடன் வாழைப்பழங்களை மிதமாக சாப்பிடுவது அறிவுறுத்தப்படுகிறது.

வாழைப்பழங்களை அதிகமாக உட்கொள்வது ஹைபர் கலீமியாவுக்கு வழிவகுக்கும், இது உயர்ந்த பொட்டாசியம் அளவுகளைக் கொண்ட ஒரு நிலை, ஆனால் இது சாதாரண நுகர்வுடன் ஏற்பட வாய்ப்பில்லை. ஒட்டுமொத்தமாக, சீரான உணவின் ஒரு பகுதியாக வாழைப்பழத்தை அனுபவிப்பது சிறந்தது.

**பொறுப்பு துறப்பு:**

இந்தக் கட்டுரை பொது தளத்தில்/ நாங்கள் தொடர்பு கொண்டு பேசிய நிபுணர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் குறிப்பிட்டு இருப்பதை நீங்கள் கடைபிடிக்கும் முன், உங்கள் குடும்ப மருத்துவர் அல்லது உங்கள் உடல்நலப் பயிற்சியாளரை அணுகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

# வாழ்த்தி மகிழ்கிறோம்...!


காரைக்குடி எஸ்.எம்.எஸ்.வி மேல்நிலைப்பள்ளி
முதுகலை ஆசிரியர் கவிஞர் சேவு.முத்துக்குமார்–நாச்சம்மை
அவர்களின் மகன் Dr.மு.பழநியப்பன் MBBS,MEM,FICCM க்கும்,
வலையபட்டி அண.ராமசாமி–கவிதா அவர்களின் மகள்
Dr.ரா.இந்திரா MBBS,(Jipmer)M.S (ENT)க்கும்
பொன்னமராவதி புதுப்பட்டி அ.செ.ஜெயம் மகாலில்
சித்திரை மாதம் 15 ஆம் நாள் 30.04.2025
புதன்கிழமை அன்று திருமணம் நடைபெற்றது.
காரைக்குடி அபூர்வா மகாலில் நடைபெற்ற பெண்
அழைப்பு வரவேற்பு நிகழ்வில் ஆசிரியர்
சேவு.முத்துக்குமார் எழுதிய
'மகளாக வந்த தேவதையே' எனும் நூல்
வெளியிடப்பட்டு அனைவருக்கும்
வழங்கப்பட்டது. வாழ்த்தரங்க நிகழ்வில்
சிவகங்கை மாவட்டச் சதுரங்கக்கழகத்
தலைவர் கானாடு காத்தான்
ஆர்..எம்.என் கருப்பையா தலைமை
தாங்கினார்.'திருக்குறள் தேனீ' செயம்
கொண்டான் வரவேற்றார்.
'மனிதத் தேனீ ' சொக்கலிங்கம்,
'தமிழ்க்கடல்' தேவகோட்டை ராமனாதன்,
பேராசிரியர் பாகை கண்ணதாசன்,
ஆசிரியர் சொக்கலிங்கம்,
'தமிழ்ச்செம்மல்' மெய்யாண்டவர்,
அருளிசைமணி சுப்பிரமணியன்,
விஜய் தொலைக்காட்சி புகழ் நாராயண
கோவிந்தன் ஆகியோர் வாழ்த்துரை
வழங்கினர்.'சதுரங்க நாயகன் 'மீ.கண்ணன்
நன்றி கூறினார்.மணமக்கள் வளம் பல
பெற்று நலமுடன் வாழ
நாம் நகரத்தார் மின்னிதழ் வாழ்த்துகிறது.




# திருமண நிகழ்வில்....

Dr.மு.பழநியப்பன் MBBS, MEM, FICCM
Dr.ரா.இந்திரா MBBS, (Jipmer)M.S (ENT)











# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA


## புன்னகைப் பாப்பா



பூனைக்குட்டி பூனைக்குட்டி
… மியாவ்… மியாவ்… மியாவ்…
புல்லை மேயும் ஆட்டுக்குட்டி
… மே… மே… மே…
பொன்னி வீட்டு நாய்க்குட்டி
… லொள்… லொள்… லொள்…
புன்னகைக்கும் பாப்பா உன் பேர்
… சொல் சொல் சொல்!

## ஓவியம் ஓவியம்

நீலம் மஞ்சள் பச்சை வண்ணம்
… ஓவியம் வரைவோமா
நீலம் தீட்ட வானம் ஆகும்
… தீட்டிப் பார்ப்போமா
மஞ்சள் கொண்டு சூரியன் வரைந்து
… ஒளிரச் செய்வோமா
பச்சை தீட்டிப் புல்வெளியாக்கிப்
… பார்த்து மகிழ்வோமா!



# மோதகத்தின் தத்துவம்



சிவன் அபிஷேகப் பிரியர், விஷ்ணு அலங்காரப் பிரியர், விநாயகரோ நைவேத்தியப் பிரியராவார். குழந்தை சுவாமியான பிள்ளையாருக்குக் குறைவில்லாமல் கொழுக்கட்டை, அப்பம், மோதகம், பொங்கல், தேங்காய், பழவகைகள் யாவற்றையும் நைவேத்தியம் செய்து வழிபடுவது மிகவும் சிறப்பினை அளிக்கும்.

கொழுக்கட்டை எனப்படும் மோதகம் விநாயகப் பெருமானுக்கு மிகவும் பிடிக்கும் நைவேத்தியம். யானைக்கு மிகவும் பிடித்த ஆகாரங்கள் அரிசி, வெல்லக்கட்டி, தேங்காய் ஆகியவை. இவற்றைக் கொண்டே மோதகம் தயாரிக்கப்படுகிறது.



கொழுக்கட்டையில் மாவுப்பண்டமும் அதன் உள்ளே பூரணமும் உண்டு. பூரணம் இல்லாமல் மாவுப்பண்டம் சுவைப்பதில்லை. அதுபோல் பூரண பிரம்மத்தை அறியாத மனித வாழ்வில் சுகமில்லை. அர்த்தமில்லை. இந்தத் தத்துவத்தின் சின்னம்தான் கொழுக்கட்டை. எம்பெருமானே! வெளியே நான் காட்சி அளித்தாலும் என்னுள்ளே பூரணமாக இருந்து என்னைப் புனிதப்படுத்துவது நீயல்லவோ! என்னையே நான் ஆத்ம நிவேதனம் செய்கிறேன் என்பது மோதகத்தின் தத்துவ விளக்கமாகும்.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram




# முட்டைக்கோஸ் மஞ்சூரியன்



மாலை வேளையில் உங்கள் குழந்தைகள் சாப்பிட வாய்க்கு ருசியான ஸ்நாக்ஸ் ஏதாவது செய்து கொடுக்க கேட்கிறார்களா? உங்கள் வீட்டில் முட்டைக்கோஸ் உள்ளதா? அப்படியானால் ரெஸ்டாரண்ட்டுகளில் விற்கப்படும் சுவையான மஞ்சூரியனை செய்யுங்கள்

இந்த முட்டைக்கோஸ் மஞ்சூரியன் செய்வதற்கு மிகவும் சுலபமாக இருக்கும். மேலும் இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கேட்டு விரும்பி சாப்பிடக்கூடியவாறும் இருக்கும். மழை பெய்யும் போது இப்படியான மஞ்சூரியனை செய்து சாப்பிட்டால் இன்னும் பிரமாதமாக இருக்கும்.

உங்களுக்கு முட்டைக்கோஸ் மஞ்சூரியனை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? இந்த இதழில் முட்டைக்கோஸ் மஞ்சூரியன் ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.



## தேவையான பொருட்கள்:

- முட்டைக்கோஸ் – 1/2 கிலோ
- மைதா – 1/2 கப்
- சோள மாவு – 2 டேபிள் ஸ்பூன்
- மிளகாய் தூள் – 1 டீஸ்பூன்
- கரம் மசாலா – 1 டீஸ்பூன்
- இஞ்சி பூண்டு பேஸ்ட் – 1 டீஸ்பூன்
- மிளகுத் தூள் – 1 டீஸ்பூன்
- கறிவேப்பிலை – சிறிது
- கொத்தமல்லி – சிறிது
- தண்ணீர் – சிறிது
- உப்பு – சுவைக்கேற்ப
- எண்ணெய் – பொரிப்பதற்கு தேவையான அளவு

## வதக்குவதற்கு...

- சோள மாவு – 1/2 டேபிள் ஸ்பூன்
- தண்ணீர் – 1/2 கப்
- எண்ணெய் – 2 டீஸ்பூன்
- பூண்டு – 1 டீஸ்பூன்
- பச்சை மிளகாய் – 1 டீஸ்பூன்
- வெங்காயம் – 1 (நீளவாக்கில் நறுக்கியது)
- இஞ்சி பூண்டு பேஸ்ட் – 1/4 டீஸ்பூன்
- சிறிய குடைமிளகாய் – 1 (பொடியாக நறுக்கியது)
- தக்காளி சாஸ் – 2 டீஸ்பூன்
- சோயா சாஸ் – 1 டீஸ்பூன்
- வினிகர் – 1 டீஸ்பூன்
- க்ரீன் சில்லி சாஸ் – 1 டீஸ்பூன்
- மிளகுத் தூள் – 1/2 டீஸ்பூன்
- உப்பு – சிறிது

**செய்முறை :**

- முதலில் ஒரு அகலமான பாத்திரத்தில் பொடியாக நறுக்கிய முட்டைக்கோஸ், மைதா, சோள மாவு, மிளகாய் தூள், கரம் மசாலா, இஞ்சி பூண்டு பேஸ்ட், மிளகுத் தூள், பொடியாக நறுக்கிய கறிவேப்பிலை, கொத்தமல்லி மற்றும் சிறிது உப்பு சேர்த்து, 2 டேபிள் ஸ்பூன் நீரை ஊற்றி கைகளால் பிசைந்து விட வேண்டும்.

- பின்பு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும், பிசைந்து வைத்துள்ளதை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து உருட்டி, எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

- பிறகு ஒரு கிண்ணத்தில் 1/2 டேபிள் ஸ்பூன் மைதா மற்றும் 1/2 கப் நீரை ஊற்றி கரைத்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

- பின்னர் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் 2 டீஸ்பூன் எண்ணெய் ஊற்றி சூடானதும், பொடியாக நறுக்கிய பூண்டு மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து வதக்க வேண்டும்.

- பின் அதில் நீளவாக்கில் நறுக்கிய வெங்காயம் மற்றும் இஞ்சி பூண்டு பேஸ்ட் சேர்த்து நன்கு வதக்க வேண்டும்.

- அடுத்து அதில் நறுக்கிய குடைமிளகாயை சேர்த்து 1 நிமிடம் வதக்க வேண்டும்.

- பின்பு அதில் தக்காளி சாஸ், சோயா சாஸ், வினிகர், க்ரீன் சில்லி சாஸ் மற்றும் மிளகுத் தூள் சேர்த்து, சிறிது உப்பு தூவி நன்கு கிளறி விட வேண்டும்.

- அதன் பின் அதில் சோள மாவு நீரை ஊற்றி 1 நிமிடம் தொடர்ந்து கிளறி விட வேண்டும். கெட்டியாகத் தொடங்கியதும், அதில் ப்ரை செய்து வைத்துள்ள முட்டைக்கோஸ் உருண்டைகளை சேர்த்து, 2 நிமிடம் கிளறி இறக்கினால், சுவையான வெஜ் மஞ்சூரியன் தயார்.

**கட்டுரையாக்கம்:**
**உமாராணி சொக்கலிங்கம்.**
**நற்சாந்துபட்டி ஈரோடு.**






இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். வாசகர்கள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

# NAGARATHAAR KAPITAL

(Will learn and earn together in wealth creating Journey)

## Webinar Course.

I. Stock Market Course (Beginners).
Basics, Fundamentals, Technical (Introduction).

II. Stock Market Course (Advanced).
Technical, Strategies.

## Why One Wealth Course?

Learn from Qualified and Experienced Expert Panelists.
Your search for in-depth Knowledge ends here.
You will become a Professional trader and Informed Investor.
Assist to Develops investment strategies to achieving financial goals
Got Learn about Different Market.
Personalized financial advice.

## Who can join?

I. Students.

II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.

III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.

IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.

**Webinar Dates** — Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum For August 2025 Class will be on 09th (SATURDAY).

**Webinar Timings** — India Time: 17:30Hrs - 18.30Hrs / 21.00 - 22.00Hrs, On Week days & 17.00Hrs - 18.00Hrs / 20.00 - 21.00Hrs Week Ends.

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...



நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர்கள் எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு நிறுவனம் குறித்த பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

insecticides (INDIA) LIMITED

**இன்செக்டிசைட்ஸ் இந்தியா லிமிடெட்,**

நிறுவனத்தை பற்றி :-

1996 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த வணிகம், 2001 ஆம் ஆண்டு செயல்பாடுகளைத் தொடங்கியது. தற்போது இந்த நிறுவனம் நிறுவனக் குடும்பத்தின் இரண்டாம் தலைமுறையினரால் நடத்தப்படுகிறது. மூன்றாம் தலைமுறை சமீபத்தில் இணைந்துள்ளது. அவர்களிடம் 6 தொழிற்சாலைகள் உள்ளன. ராஜஸ்தானில் 3 , ஜம்மு காஷ்மீரில் 2 மற்றும் குஜராத்தில் 1. நிறுவனத்தின் முதன்மை வணிகம் B2C ஆகும், இது மொத்த வருவாயில் ~72-75% ஆகும். B2B விற்பனை வருவாயில் ~25% ஆகவும், ஏற்றுமதி வருவாயில் 3-4% ஆகவும் உள்ளது. நிறுவனம் தொழில்நுட்ப தர மற்றும் வடிவமைக்கப்பட்ட பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்கிறது. உற்பத்தி செய்யப்படும் தொழில்நுட்ப தர பூச்சிக்கொல்லிகளில் தோராயமாக 5 0 % நிறுவனத்தின் சொந்த சூத்திரங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது, மேலும் 50% B2B ஆக விற்கப்படுகிறது.

இன்செக்டிசைட்ஸ் இந்தியா லிமிடெட், இந்தியாவின் முன்னணி வேளாண் வேதிப்பொருட்கள் உற்பத்தியாளர்களில் ஒன்றாகும். இது விவசாயிகளுக்கு அவர்களின் பயிர் பாதுகாப்புத் தேவைகளுக்கு ஏற்றவாறு பல்வேறு வகையான தயாரிப்புகளை வழங்குகிறது.

இன்செக்டிசைட்ஸ் நிறுவனம் மதிப்புமிக்க "டிராக்டர் பிராண்ட்"-ஐ சொந்தமாகக் கொண்டுள்ளது, இது இந்தியா முழுவதும் விவசாயிகள் மத்தியில் மிகவும் பிரபலமாக உள்ளது. நுவன், லெத்தல் கோல்ட், ஹெர்குலஸ், பல்சர், கிரீன் லேபிள், ஹகாமா, லெத்தல் சூப்பர் போன்றவை மிகப்பெரிய விற்பனையாகும் பிராண்டுகளில் அடங்கும்.

நிறுவனம் உள்–உற்பத்தி மற்றும் வலுவான உள்–உற்பத்தி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டால் ஆதரிக்கப்படும் அவுட்சோர்சிங் மாதிரியின் கலவையுடன் நெகிழ்வான உற்பத்தி அணுகு முறையைக் கொண்டுள்ளது. பிராண்டட் ஃபார்முலேஷன்கள் (65%) மற்றும் நிறுவன விற்பனை (26%) இரண்டிலும் இருப்பதன் மூலம் வருவாய் பன்முகத்தன்மை அதிகரிக்கிறது.

இந்த நிறுவனம் நிசான், ஓஏடி அக்ரியோ மற்றும் மொமென்டிவ் உள்ளிட்ட பல பன்னாட்டு நிறுவனங்களுடன் கூட்டாண்மைகளைக் கொண்டுள்ளது.

இந்த ஒப்பந்தங்களில் பெரும்பாலானவை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உரிமம் மற்றும் பேக்கேஜிங் ஆகியவற்றை உள்ளடக்கியது.

நிசானுடன் ஒப்பந்தம்: நிசானிலிருந்து பெறப்பட்ட ஒரு கூட்டு தயாரிப்புக்கு (ஹச்சிமான்) ஒரு தொழில்நுட்ப தயாரிப்பை நிறுவனம் தயாரிக்கிறது. நிசானுடனான கூட்டு குறிப்பாக குறிப்பிடத்தக்கது, இது ~5 பில்லியன் வருவாயை (ஆண்டு டாப்லைனில் ~25%) ஈட்டுகிறது. இதில் ஷின்வா, ஹகாமா, பல்சர் மற்றும் ஹச்சிமான் போன்ற தயாரிப்புகளும் அடங்கும். நிசானுடனான ஒப்பந்தத்தில் உரிமம் பெற்ற தயாரிப்புகளுக்கு குறைந்தபட்ச அளவு உறுதிமொழிகள் அடங்கும்.

OAT அக்ரியோவுடன் ஏற்பாடு: புதிய மூலக்கூறு கண்டுபிடிப்புக்காக நிறுவனம் OAT அக்ரியோவுடன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கூட்டாண்மையைக் கொண்டுள்ளது.

இந்தியா மற்றும் அண்டை நாடுகளில் விளைந்த தயாரிப்புகளை விற்பனை செய்வதற்கான பிரத்யேக உரிமைகளை நிறுவனம் கொண்டுள்ளது. OAT உடனான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கூட்டாண்மை ஏற்கனவே நம்பிக்கைக்குரிய முடிவுகளைத் தந்துள்ளது, 11 விண்ணப்பங்களில் இரண்டு காப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஒத்துழைப்பிலிருந்து ஒரு தயாரிப்பு தற்போது தரவு உருவாக்கும் கட்டத்தில் உள்ளது மற்றும் அடுத்த 1.5 முதல் 2 ஆண்டுகளுக்குள் வணிக மயமாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிறுவனம் OAT இலிருந்து ஒரு உயிரி தயாரிப்பான Saffron ஐயும் பெறுகிறது, அதை நாகார்ஜுனாவுடன் சந்தையைப் பகிர்ந்து கொள்கிறது.

இந்நிறுவனம் சோபாங்கி (ராஜஸ்தான்), சம்பா, உதம்பூர் (ஜம்மு & காஷ்மீர்) மற்றும் தஹேஜ் (குஜராத்) ஆகிய இடங்களில் ஐந்து அதிநவீன ஃபார்முலேஷன் வசதிகளைக் கொண்டுள்ளது. தொழில்நுட்ப தர ரசாயனங்களை உற்பத்தி செய்வதற்காக சோபாங்கி மற்றும் தஹேஜில் இரண்டு தொழில்நுட்ப தொகுப்பு ஆலைகளையும் நிறுவனம் கொண்டுள்ளது, இது பின்தங்கிய ஒருங்கிணைப்பு மூலம் போட்டித்தன்மையை வழங்குகிறது. நிறுவனம் ஒரு உயிரி உற்பத்தி அலகு மற்றும் நான்கு பிரத்யேக ஆராய்ச்சி வசதிகளையும் கொண்டுள்ளது. நிறுவனம் 3,000 விநியோகஸ்தர்கள் மற்றும் 500 க்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட விற்பனைக் குழுவைக் கொண்ட 31 டிப்போக்கள்/ கிளைகளின் உதவியுடன் 60,000 க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் தனது தயாரிப்புகளை சந்தைப்படுத்துகிறது.

இந்நிறுவனம் ஒரு உயிரி உற்பத்தி அலகு மற்றும் நான்கு பிரத்யேக ஆராய்ச்சி வசதிகளையும் கொண்டுள்ளது. இது சோபாங்கி மற்றும் தஹேஜில் தொழில்நுட்ப தொகுப்பு ஆலைகளையும் கொண்டுள்ளது, இது நிறுவனத்திற்கு பின் தங்கிய ஒருங்கிணைப்பு மூலம் போட்டி நன்மையை வழங்குகிறது. விவசாயிகளுக்கு பயனுள்ள மற்றும் புதுமையான தயாரிப்புகளை வழங்க சிறந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திறன்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் நிறுவனம் கொண்டுள்ளது.

உலகத்தரம் வாய்ந்த புதிய தலைமுறை தயாரிப்புகளை சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மூலம் வீட்டிற்கு கொண்டு வருவதற்கான முயற்சியை பூச்சிக்கொல்லிகள் ( இந்தியா) முன்னெடுத்துச் சென்றுள்ளது. இந்தியாவின் மிகவும் பிரபலமான பொதுவான பூச்சிக்கொல்லியான THIMET–க்காக, உலகளாவிய ஜாம்பவான்களான AMVAC, USA உடன் தொழில்நுட்ப ஒத்துழைப்பை IIL ஏற்படுத்தியுள்ளது. இந்திய விவசாயிகளின் முதல் தேர்வாக இருக்கும் திமெட், நிறுவனம் அடிமட்ட அளவில் அதன் தளத்தை மேலும் வலுப்படுத்த உதவியுள்ளது.

நிறுவனம் தயாரிப்பு தரம், போட்டி விலை நிர்ணயம் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி விரிவாக்கப்பட்ட விநியோக வலையமைப்பின் மிக உயர்ந்த தரங்களைப் பராமரிக்கிறது. இந்த மூலோபாய அணுகுமுறை முக்கிய தயாரிப்பு வகைகளில் ஒருங்கிணைந்த போர்ட்ஃபோலியோவை உருவாக்க ஐஐஎல்க்கு உதவியுள்ளது. 'மேக் இன் இந்தியா' முயற்சிக்கு பங்களிக்கும் அதே வேளையில், உள்நாட்டு மற்றும்

ஏற்றுமதி சந்தைகளுக்கு சேவை செய்வதையும், பிரகாசமான எதிர்காலத்திற்கான நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. நிறுவனத்தில் 2 1 + தயாரிப்புகள், 105+ ஃபார்முலேஷன் தயாரிப்புகள், 13 கவனம் செலுத்திய மகாரத்னா தயாரிப்புகள், 27 மகாரத்னா தயாரிப்புகள் உள்ளன.

இன்செக்டிசைட்ஸ் இந்தியா லிமிடெட், சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு சர்வதேச வணிகத்தைத் தொடங்கியது, இன்று 30 க்கும் மேற்பட்ட நாடுகளில் 100க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுடன் பதிவுகள் மூலம் உள்ளது. ஐஐஎல் இதுவரை 75 க்கும் மேற்பட்ட பதிவுகளைப் பெற்றுள்ளது. இது மதிப்புமிக்க 2 – நட்சத்திர வர்த்தக நிறுவன அந்தஸ்தைப் பெற்றுள்ளது. சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமாக தயாரிப்புகளை வழங்குவதற்காக குஜராத்தின் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஏற்றுமதி சார்ந்த பிரிவை ஐஐஎல் அமைத்துள்ளது.

ஐஐஎல் இப்போது உலக சந்தையில் ஒரு வலிமையான இருப்பைக் கொண்டுள்ளது & இப்போது ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு, ஆசிய சந்தைகளில் கால்தடங்களை பதித்துள்ளது.

நிறுவனத்தின் சமீபத்திய புதுப்பிப்பின்படி, இன்செக்டிசைட்ஸ் (இந்தியா) லிமிடெட் (IIL), நிசான் கெமிக்கல் கார்ப்பரேஷனுடன் இணைந்து மே 29, 2025 அன்று ஆல்டேரை அறிமுகப்படுத்துகிறது.

இந்தியாவின் பயிர் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து துறையில் முன்னணி நிறுவனமான, மும்பை பங்குச் சந்தை (BSE) மற்றும் தேசிய பங்குச் சந்தை (NSE) இரண்டிலும் பட்டியலிடப்பட்டுள்ள,

பூச்சிக்கொல்லிகள் லிமிடெட் (IIL), நெல்லுக்கான காப்புரிமை பெற்ற முன்–வெளிப்படும் களைக்கொல்லியான Altair–ஐ அறிமுகப்படுத்தியதாக பெருமையுடன் அறிவிக்கிறது. Altair ஜப்பானின் Nissan Chemical Corporation–ஆல் உருவாக்கப்பட்டது, மேலும் இந்தியாவில் IIL – ஆல் பிரத்தியேகமாக சந்தைப்படுத்தப்படும். இந்திய விவசாயிகளுக்கு உலகத்தரம் வாய்ந்த தீர்வுகளை கொண்டு வருவதற்கான IIL – ன் உறுதிப்பாட்டில் Altair ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. விவசாய கண்டுபிடிப்புகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான Insecticides (India) Limited மற்றும் ஜப்பானின் Nissan Chemical Corporation–ஆல் இந்த மூலோபாய கூட்டாண்மை 2013 முதல் இந்திய வயல்களுக்கு அதிநவீன ஜப்பானிய தொழில்நுட்பத்தைக் கொண்டுவருகிறது.

**அடிப்படைக் கண்ணோட்டம்:–**

நிறுவனம் 48.81 ஒருங்கிணைந்த EPS (2025–03 அன்று முடிவடைந்த பன்னிரண்டு மாதங்கள் பின்தங்கியிருக்கிறது), தொழில்துறை PE 47.39 உடன் ஒப்பிடும் போது ஒருங்கிணைந்த PE விகிதம் 21.21. முக மதிப்பு 10 கொண்ட நிறுவனம்.

சமீபத்திய கிடைக்கக்கூடிய தரவுகளின்படி, முன்னெடுப்பாளர்கள் மற்றும் முன்னெடுப்பாளர் குழு 72.30% வைத்திருக்கிறது.

**தனிப்பட்ட பார்வை:–**

வேளாண் வேதிப்பொருட்களின் முன்னணி உற்பத்தியாளர்களில் ஒருவரான இந்த நிறுவனம், வலுவான உள்நாட்டு மற்றும் சர்வதேச இருப்பைக் கொண்டுள்ளது, ஒட்டுமொத்தமாக வலுவான அடிப்படைகள் மற்றும் நிதி அளவுருக்களைக் கொண்டுள்ளது.

தனிப்பட்ட ஆய்வின்படி, நடுத்தர கால (9 மாதங்கள் முதல் 18 மாதங்கள் வரை) முதல் நீண்ட கால (24 முதல் 36 மாதங்கள் வரை) முதலீட்டிற்கு எனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் நல்லது. நடுத்தர காலத்தில் 1 5 0 0 + + ஐக் காணலாம். எனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் நீண்ட காலத்திற்கு 1850+++ ஐ எதிர்பார்க்கிறேன்.

**நிறுவன அடிப்படைகள்:–**

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>**21.21** | EPS - TTM (₹)<br>**48.72** |
| MCap (₹ Cr.)<br>**3,009.30** | Sectoral MCap Rank<br>**14** |
| PB Ratio (x)<br>**2.73** | Div Yield (%)<br>**0.19** |
| Face Value (₹)<br>**10.00** | Beta<br>**2.49** |
| VWAP (₹)<br>**1,054.83** | 52W H/L (₹)<br>**1,084.25 / 542.55** |

**Insecticide Ind Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | ↑1.02% |
| 1 Week | ↑2.44% |
| 1 Month | ↑7.11% |
| 3 Months | ↑45.9% |
| 1 Year | ↑33.1% |
| 3 Years | ↑49.46% |
| 5 Years | ↑261.26% |

## ROE Outperforming 5 Year Average

**The company delivered an ROE of 13.09% in the year ending Mar 31, 2025 outperforming its 5 year avg. of 10.81%. (Source: Consolidated Financials)**

## Employee & Interest Expense

**The company has spent less than 1% of its operating revenues towards interest expenses and 6.94% towards employee cost in the year ending Mar 31, 2025. (Source: Consolidated Financials)**

## Decrease in Cash from Investing

**The company has used Rs 37.72 cr for investing activities which is a YoY decrease of 12.26%. (Source: Consolidated Financials)**

## Insecticide Ind Share Price Update

**Insecticides (India) Ltd. share price moved up by 1.36% from its previous close of Rs 1,018.40. Insecticides (India) Ltd. stock last traded price is 1,032.25**

## நிறுவன நிதி நிலை:–

### Insecticide Ind Financials

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Employee & Interest Expense**

Company has spent less than 1% of its operating revenues towards interest expenses and 6.94% towards employee cost in the year ending Mar 31, 2025. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | MAR 2025 | DEC 2024 | SEP 2024 | JUN 2024 | MAR 2024 |
|---|---|---|---|---|---|
| Total Income | 361.78 | 357.86 | 628.61 | 659.20 | 277.04 |
| Total Income Growth (%) | 1.09 | -43.07 | -4.64 | 137.95 | -22.87 |
| Total Expenses | 337.62 | 334.39 | 544.78 | 592.32 | 271.14 |
| Total Expenses Growth (%) | 0.96 | -38.62 | -8.03 | 118.45 | -20.10 |
| EBIT | 24.16 | 23.47 | 83.83 | 66.89 | 5.89 |
| EBIT Growth (%) | 2.96 | -72.01 | 25.34 | 1,034.69 | -70.25 |
| Profit after Tax (PAT) | 13.89 | 17.37 | 61.49 | 49.01 | 7.76 |
| PAT Growth (%) | -20.01 | -71.76 | 25.46 | 531.34 | -36.92 |
| EBIT Margin (%) | 6.68 | 6.56 | 13.34 | 10.15 | 2.13 |
| Net Profit Margin (%) | 3.84 | 4.85 | 9.78 | 7.44 | 2.80 |
| Basic EPS (₹) | 4.77 | 5.96 | 20.78 | 16.56 | 2.62 |

## பணியாளர் மற்றும் வட்டி செலவு

மார்ச் 31, 2025 உடன் முடிவடைந்த ஆண்டில், நிறுவனம் அதன் இயக்க வருவாயில் 1% க்கும் குறைவாகவே வட்டி செலவுகளுக்காகவும், 6.94% ஊழியர் செலவுக்காகவும் செலவிட்டுள்ளது.

### Insecticide Ind Financials

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — CONSOLIDATED

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 1,898.15 | 1,713.50 | 1,696.31 | 1,396.20 | 1,425.95 |
| Total Assets Growth (%) | 10.78 | 1.01 | 21.50 | -2.09 | 10.16 |
| Total Liabilities | 813.55 | 699.96 | 778.02 | 526.59 | 605.57 |
| Total Liabilities Growth (%) | 16.23 | -10.03 | 47.75 | -13.04 | 7.62 |
| Total Equity | 1,084.59 | 1,013.53 | 918.29 | 869.61 | 820.38 |
| Total Equity Growth (%) | 7.01 | 10.37 | 5.60 | 6.00 | 12.11 |
| Current Ratio (x) | 1.83 | 1.90 | 1.62 | 1.97 | 1.86 |
| Total Debt to Equity (x) | 0.09 | 0.08 | 0.17 | 0.06 | 0.11 |
| Contingent Liabilities | 0.11 | 111.96 | 106.25 | 225.12 | 97.90 |

**Insecticide Ind Financials**

Income (P&L) | Balance Sheet | **Cash Flow** | Ratios — CONSOLIDATED

**INSIGHTS**

**Cash from Operations vs PAT**
Operating cash flow of Rs 93.46 cr is 0.66 times compared to the reported net profit of Rs 142.02 cr. (Source: Consolidated Financials)

**Decrease in Cash from Investing**
Company has used Rs 37.72 cr for investing activities which is an YoY decrease of 12.26%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 93.46 | 183.67 | -10.63 | 134.85 | 155.36 |
| Net Cash used in Investing Activities | -37.72 | -42.99 | -86.40 | 9.31 | -112.60 |
| Net Cash flow from Financing Activities | -61.09 | -98.06 | 79.68 | -114.64 | -104.03 |
| Net Cash Flow | -5.36 | 42.62 | -17.35 | 29.52 | -61.27 |
| Closing Cash & Cash Equivalent | 55.93 | 61.25 | 18.63 | 35.98 | 6.46 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↓-8.69 | ↑228.79 | ↓-48.23 | ↑456.70 | ↓-90.46 |
| Total Debt/ CFO (x) | 1.07 | 0.45 | -14.96 | 0.37 | 0.61 |

## செயல்பாடுகளிலிருந்து வரும் ரொக்கம் vs PAT

ரூ. 93.46 கோடி இயக்க ரொக்கப் பாய்வு, அறிவிக்கப்பட்ட நிகர லாபமான ரூ. 142.02 கோடியுடன் ஒப்பிடும்போது 0.66 மடங்கு ஆகும். (மூலம்: ஒருங்கிணைந்த நிதியியல்)

## முதலீட்டிலிருந்து வரும் பணத்தில் குறைவு

நிறுவனம் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு ரூ.37.72 கோடியைப் பயன்படுத்தியுள்ளது, இது ஆண்டுக்கு ஆண்டு 12.26% குறைவு. (மூலம்: ஒருங்கிணைந்த நிதி)

**Insecticide Ind Financials**

Income (P&L) | Balance Sheet | Cash Flow | **Ratios** — CONSOLIDATED

**INSIGHTS**

**ROE Outperforming 5 Year Average**
Company delivered ROE of 13.09% in year ending Mar 31, 2025 outperforming its 5 year avg. of 10.81%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2025 | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 13.09 | 10.09 | 6.88 | 12.35 | 11.44 |
| Return on Capital Employed (%) | 17.76 | 13.50 | 10.35 | 16.61 | 16.09 |
| Return on Assets (%) | 7.48 | 5.97 | 3.72 | 7.69 | 6.58 |
| Interest Coverage Ratio (x) | 33.25 | 15.80 | 9.16 | 26.22 | 20.36 |
| Asset Turnover Ratio (x) | 1.11 | 1.15 | 1.16 | 1.07 | 99.59 |
| Price to Earnings (x) | 12.14 | 14.14 | 21.88 | 11.27 | 10.44 |
| Price to Book (x) | 1.59 | 1.43 | 1.51 | 1.39 | 1.19 |
| EV/EBITDA (x) | 7.73 | 8.54 | 12.36 | 7.04 | 6.19 |
| EBITDA Margin (%) | 11.41 | 8.74 | 6.83 | 11.56 | 11.26 |

## ROE 5 ஆண்டு சராசரியை விட சிறப்பாக செயல்படுகிறது

இந்த நிறுவனம் மார்ச் 31, 2025 உடன் முடிவடைந்த ஆண்டில் 13.09% ROE ஐ வழங்கியது, அதன் 5 ஆண்டு சராசரியான 10.81% ஐ விட சிறப்பாக செயல்படுகிறது.

## விளக்கப்படம் தொழில்நுட்பங்கள்:–

### Insecticide Ind Technicals

Buy / Sell Signals | Price Analysis | Pivot Levels & ATR | **Chart**




## சக நிறுவன ஒப்பீடு:–


### Insecticide Ind Peer Comparison

**Insecticide Ind Stock Performance** | Ratio Performance

CHART | TABLE

Insecticide Ind | Rallis India | NACL Industries | Bharat Rasayan

1D 1W 1M 3M 6M 1Y 5Y




### Insecticide Ind Peer Comparison

Insecticide Ind Stock Performance | **Ratio Performance**

SEE ALL PARAMETERS


| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|
| Insecticide Ind | 21.11 | 2.76 | 13.09 | 7.48 | 9.89 | 9.95 |
| Rallis India | 42.98 | 4.36 | 9.67 | 5.74 | 0.79 | 8.72 |
| NACL Industries | -101.22 | 13.81 | -21.57 | -7.29 | -9.00 | -6.79 |
| Bharat Rasayan | 32.41 | 4.04 | 12.47 | 10.00 | -3.04 | 14.82 |
| Bhagiradha Chem | 285.73 | 5.80 | 2.03 | 1.48 | 0.99 | 7.34 |

Add More

## பங்குதாரர் முறை:–

### Insecticide Ind Shareholding Pattern

**QOQ Change** | Total Shareholdings



*Showing Insecticide Ind Shareholding as on Jun 2025*

| CATEGORY | JUN 2025 | MAR 2025 | DEC 2024 | SEP 2024 |
|---|---|---|---|---|
| Promoters | 72.30 | 72.30 | 72.30 | 72.16 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 4.65 | 4.50 | 5.13 | 5.43 |
| DII | 9.70 | 9.57 | 9.22 | 9.06 |
| Mutual Funds | 9.07 | 9.07 | 9.00 | 8.67 |
| Others | 13.34 | 13.62 | 13.35 | 13.34 |

## மியூச்சுவல்ஃபண்ட் உரிமை:–

**Insecticide Ind MF Ownership**

| Scheme | Category | Rating | Amount Invested (in Cr.) | % of AUM | % Change (MoM basis) |
|---|---|---|---|---|---|
| HDFC Small Cap Direct-G | Equity: Small Cap | 3 ★ | 255.19 | 0.71% | 0.00 |
| HDFC Retirement Savings Fund-Hybrid Debt Dire... | Hybrid: Conservative Hybrid | 3 ★ | 0.19 | 0.11905332% | -52.38 |
| Motilal Oswal BSE 1000 Index Direct-G | Equity: Flexi Cap | | 0.00 | 0.00374531% | 100.00 |

*MF Ownership as on 30 June 2025*

View all Mutual Fund Schemes »

## இந்த இதழில் எமது ஆய்வு பார்வையில் குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள் :

### க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, **Apollo Micro Systems Ltd**
**Entry 170 to 180. Add more on down till 150.**
**Target 200 and 220**

2, **Enviro Infra Engineers Ltd...**
**Entry 250 to 260. Add more on down till 200.**
**Target 290 and 3203.**

3, **Shriram Finance Ltd...**
**Entry 600 to 620. Add more on the down till 500.**
**Target 700 and 770**

4, **Wipro Ltd...**
**Entry 240 to 250. Add more on down till 220.**
**Hold for Target 270**

5, **Bharat Electronics Ltd...**
**Entry 370 to 380. Add more on down till 320.**
**Hold for Target 420**


6, **Dynemic Products Ltd...**
**Entry 340 to 350. Add more on down till 300.**
**Target 400 and 440**

**பொறுப்புத் துறப்பு**

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

# பன்னிரண்டு ராசிகளும்... ராசியான பிள்ளையாரும்...


–ஜோதிடர் எல்லி
9894176494

முக்கண்ணனின் மூத்த புதல்வனான விநாயகப் பெருமான் பல்வேறு பெயர்களில் பல்வேறு நிலைகளில் நமக்கு காட்சியளித்து இந்த பூவுலகில் அருள் பாலித்து வருகிறார். எந்த செயலை தொடங்கும் முன்னரும் அது தடங்கலின்றி வெற்றிகரமாக முடிய கணபதியை விட்டால் நமக்கு கதி இல்லை. ஞானத்தின் பொருளாகவும், பிரணவத்தின் உருவாகவும்.. குருவின் வடிவாகவும் உள்ளவர் விநாயகர்..



ஜோதிடத்தை பொறுத்த வரையில் முழுமுதற் சுபராக வியாழன் எனும் குருபகவான் இருந்தாலும் ஞான காரகன் என்று அழைப்பது கேது பகவானைத்தான். அந்த கேதுவின் முழுமையான அருளை பெறவும்,கேது பகவானின் தாக்கத்தை குறைக்கவும் கணபதியிடம் தான் முறையிட வேண்டும்...

ஞான காரகன் கேது கணபதியின் அருளை முழுமையாக பெற்ற கிரகம் கேதுவின் காரகத்துவம் பிள்ளையாரிடமிருந்தே வெளிப்படும்.பிள்ளையார் பொதுவாக நவகிரகங்களையும் ஆள்பவர்.எந்த கிரகத்தின் தாக்கத்தையும் போக்க வல்ல மூர்த்தி ஓங்கார வடிவிலான கணபதியே. இதை உணர்த்தவே லஷ்மி கணபதியாகவும், வித்யா கணபதியாகவும், சக்தி கணபதியாகவும் வீற்றிருந்து நமக்கு அருள் பாலித்து கொண்டிருக்கிறார்.

ஜோதிட சாஸ்திரத்தில் உள்ள 12 ராசியினரும் தங்களுக்கு உரிய விநாயக பெருமான் யார் என்பதை அறிந்து அவரை வழிபடுவது எண்ணிய காரியங்கள் ஈடேறும் ,தடைகள் விலகும். இந்த கட்டுரையில் ஒவ்வொரு ராசியினரின் பொதுவான தன்மை அவர்களுக்கான கணபதி மூர்த்தங்களை அறிந்து வழிபட்டு வாழ்வில் நன்மை அடையலாம்.

## மேஷம் :



இராசி மண்டலத்தின் முதல் வீடான மேஷ ராசி அன்பர்கள் எதிலும் முதன்மையை பெற விருப்பம் உள்ளவர்கள். தயங்காமல்,யோசிக்காமல் எதிலும் உடனடியாக இறங்கி விடுவார்கள். வெற்றியை தேடியே பயணிக்கும் இவர்கள் தலைமை பதவி மீது விருப்பம் கொண்டவர்களும் கூட

பஞ்சபூதங்களில் நெருப்பு ராசி தத்துவத்தை கொண்ட இந்த இராசி நபர்கள் எளிதில் கோப வயப்படுவார். வாழ்வில் வெற்றிகளை பெற இவர்கள் வழிபட வேண்டியவர் வீர கணபதி. இதன் மூலம் செவ்வாயின் சுபத்துவமான பலன்கள் இவர்களுக்கு கிடைக்கும்.

## ரிஷபம் :



சுக்கிரனின் ஆதிக்கத்தைப் பெற்ற இந்த இராசி அன்பர்கள் பொதுவாகவே மிகுந்த புத்தி கூர்மை கொண்ட தந்திரசாலிகள். வெற்றி பெற அனைத்து நுட்பங்களையும் கையாள கூடியவர்கள். காதல் எண்ணங்களையும் மகிழ்ச்சி ததும்பும் சொற்களை கொண்ட இவர்கள் வணங்க வேண்டிய கணபதி ராஜராஜேஸ்வரியின் அம்சத்தில் உள்ள ஸ்ரீவித்யா கணபதி.

## மிதுனம் :



ஆளுமை எண்ணத்தையும், உறவுகளை கனிவுடன் அணுகும் குணாதிசயத்தையும் கொண்டவர்கள் மிதுன ராசி அன்பர்கள். வெற்றிக்காக எவ்வளவு சிரமத்தையும் தாங்கி கொள்ள துணிந்தவர்கள். அழகிய முகவாகு கொண்ட இவர்கள் கண்டிப்பான பேர்வழிகளும் கூட. இவர்கள் வாழ்வில் மறைமுகமாக வந்து சேருகின்ற தடைகளை வென்று வெற்றிகளை பெற வழிபட வேண்டியவர் கண் திருஷ்டி கணபதி.

## கடகம் :



தாய்மை குணமும் இரக்க சிந்தனையும் கொண்டவர்கள் கடக ராசி அன்பர்கள். தன் குடும்பத்தை சிதற விடாமல் அரவணைத்து கொண்டு செல்ல விருப்பம் கொண்ட மனமிக்கவர்கள். வாழ்வில் நெளிவு சுளிவு கொண்ட இவர்களால் தாம் நிற்கும் எந்த துறையிலும் நின்று சமாளிக்க முடியும்.வாழ்வில் எண்ணியது ஈடேற இவர்கள் வணங்க வேண்டிய கணபதி ஹேரம்ப கணபதி.

## சிம்மம் :



யாரிடமும் எதற்கும் கெஞ்சாமல் வாழ்க்கையை கொண்டு போக விருப்புகிறவர்கள் சிம்ம ராசி அன்பர்கள். தாங்கள் விரும்பியபடியே வாழ எண்ணும் சுதந்திர பிரியர்கள் இந்த ராசிகாரரர்கள். ராசி அதிபதி சூரியன் என்பதால் இயல்பாகவே அரசுதுறை அரசியல் என்று அரசு சார்ந்த விசயத்தில் நாட்டம் கொண்டவர்கள். இவர்கள் தங்களுக்கு நினைத்த காரியங்கள் நிறைவேற வணங்க வேண்டிய கணபதி விஜய கணபதி.

## கன்னி :



எப்போதும் இளமை, மகிழ்ச்சி போன்ற எண்ணங்களுடனேயே இருக்க விரும்புகிறவர்கள் கன்னி ராசி அன்பர்கள்! இவர்கள் கற்பனை உலகில் சிறகடித்து பறப்பவர்கள்.

பிறரிடம் அன்பாக பழகும் இவர்கள் நண்பர்கள், எதிர்பாலினரை வசீகரிப்பவர்கள் மற்றும் காதல் எண்ணங்களில் லயித்து போகிறவர்கள். தகுதிக்கு மீறி, பிறகு பார்த்து கொள்ளலாம் என்கிற எண்ணத்தில் கடன் வாங்கி சிக்கி கொள்ளவும் சமயத்தில் வாய்ப்பு உள்ளவர்கள் இந்த இராசி அன்பர்கள். தாயார் மீது பாசம் கொண்ட இவர்கள் தங்கள் வாழ்வில் வசந்தம் வீச வணங்கவேண்டிய கணபதி உச்சிஷ்ட கணபதி.

## துலாம் :



தலைமை பண்பினை கொண்ட ராசியினர் துலாம் ராசி அன்பர்கள், சுற்றி சுழன்று பணி செய்ய விரும்பும் குணத்தை தன்னகத்தே கொண்டவர்கள். பிறரிடம் வேலை பார்க்க விரும்பாத இவர்கள் சொந்த தொழிலில் ஆர்வம் மிக்கவர்கள். பயணங்களை விரும்பும் இவர்கள் மிகுதியாக செலவு செய்வார்கள். இளமையில் ஒரு மாதிரியாக இருந்தாலும் உரிய வயதில் சுதாரித்துக் கொண்டு சிறப்பாக செயல்படுவர் இந்த இராசி அன்பர்கள்.

வாழ்வில் தொழில் வேலை நிலைக்க, தலைமை பண்பு சிறக்க இவர்கள் வணங்க வேண்டிய கணபதி க்ஷிப்ர ப்ரஸாத கணபதி.

## விருச்சிகம் :



வாழ்வில் எப்படியாவது முன்னேறிவிட வேண்டும் என்கிற வேட்கை கொண்டவர்கள் விருச்சிக ராசி அன்பர்கள். வெளியே எவ்வளவு தைரியமான நபராக தெரிந்தாலும், உள்ளுக்குள் மன ரீதியாக தம்

வாழ்க்கை பற்றிய கவலைகள் கஷ்டங்கள் இவர்களுக்கு இருக்கவே செய்யும். ஆனால் அதனை இவர்கள் வெளிப்படுத்தாமல் சமாளித்து வெற்றிபெறும் யுக்தி கொண்டவர்கள்.

தாயன்பினை முழுமையாக பெற சிலருக்கு வாய்ப்பு கிடைப்பது இல்லை.பிறர் என்ன நினைப்பார்கள் என்ற கவலை கொள்ளாமல் தன் வழியிலே சிறப்பாக செயல்படும் ராசியினர் இவர்கள்.

வாழ்வில் உள்ள மனக்குறைகளை போக்கி, மனம் மகிழ்ச்சியில் திளைக்க இவர்கள் வணங்கும் கணபதி நர்த்தன கணபதி.

## தனுசு :



நேர்மறையான எண்ணங்களை கொண்ட கெட்டிகாரரர்கள் தனுசு ராசி அன்பர்கள். வெற்றியை எப்படியாவது தனதாக்கிக் கொள்ளும் யோகம் கொண்ட ராசியினர். இவர்களுக்கு இயல்பாகவே எதிர்பாலின கவர்ச்சி மோகம் உண்டு. அரசு துறை சார்ந்த ஆதாயம், அரசியல் ஈடுபாடு இவர்களுக்கு உண்டு. மத்திம வயதிற்குள் வாழ்வில் வீடு மனை நிலபுலன்களை சம்பாதிக்க துடிப்பவர்கள் இவர்கள். தர்ம நெறியில் செல்வதால் அடிக்கடி தர்மசங்கடத்தை சந்தித்து வரும் உங்களுக்கு சங்கடஹர கணபதியே வழிபாட்டிற்கு உகந்தவர்.

## மகரம் :

காலசக்கரத்தின் 10 ம் கர்ம, ஜீவன ஸ்தானமான மகர ராசியினர் கர்மமே கண்ணாக செயல்படுவார்கள். கடின உழைப்பு, ஓய்வறியா சுறுசுறுப்பிற்கு பேர் போனவர்கள் இவர்கள்.



இவர்கள் மனதிற்குள் எப்போதும் கேள்விகளும், சிந்தனைகளும் அலைகள் போல வந்து போகும். பேச்சில் ஆர்வம் கொண்ட இவர்கள் பேச தொடங்கினால் முடிவில்லாமல் போகும். நேர்மை எண்ணம் கொண்டவர்கள், சகோதர உறவில் சிற்சில மனஸ்தாபங்கள் இவர்களுக்கு வந்து போகும்...

இவர்களுக்கு உழைப்பிற்கேற்ப ஊதியமும், புகழும் கிடைப்பதற்கு வணங்க வேண்டிய கணபதி யோக கணபதி.

## கும்பம் :



தர்க்கவாதிகள் இந்த கும்ப ராசி அன்பர்கள், யாருடைய கருத்தையும் உடனடியாக ஏற்று கொள்ள மாட்டார்கள். இதனால் சிலரது பகை கூட இவர்களுக்கு வந்து போகும்.கூட்டத்தில் சலசலப்பு களை ஏற்படுத்தி கலகலப்புகளை செய்பவர்கள். மற்றவர்களின் நிறை குறைகளை எடுத்து கூறுபவர்கள். பொருளாதார ரீதியாக எப்படியும் முன்னேறிவிடுவார்கள். இவர்கள் வாழ்வில் வெற்றியை நிலை நாட்ட வணங்க வேண்டிய கணபதி சித்தி கணபதி.

## மீனம்



இரக்க மனமும், கலையுணர்வும், நண்பர்களை நேசிக்கும் மனோபாவமும் கொண்டவர்கள் மீன ராசி அன்பர்கள். பயணங்கள், நித்திரை இவற்றை மிகுதியாக விரும்பும் சுகவாசிகள். நேர்மை, இலட்சியம் இருக்கும். பணம், பொருள் எவ்வளவு

சம்பாதித்தாலும் அதையும் தாண்டி இந்த உலகில் பிரபஞ்ச ஆற்றலை பற்றிய சிந்தனைகள் கொண்ட ராசியினர் இவர்கள். உடல் உழைப்பு இவர்களுக்கு பெரிதாக ஏற்றம் கொடுக்காது. மூளை, யுக்தி இவற்றை பயன்படுத்தும் துறைதான் கைகொடுக்கும்.இவர்கள் வாழ்வில் இன்புற்றிருக்க வணங்க வேண்டிய கணபதி பால கணபதி.

இக்கட்டுரையில் 12 ராசிக்காரர்கள் வழிபட வேண்டிய விநாயகரின் திருவுருவங்களை பார்த்தோம். பிள்ளையார் என்றாலே பிறந்த குழந்தைக்கும் பிடிக்கும். குழந்தை முதல் கிழவர் வரை விநாயகப் பெருமானைக் கண்டாலே மனதில் தனி ஆனந்தம் பிறக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. விநாயகரை எப்போதும் எங்கு தரிசித்தாலும் வணங்குங்கள். உங்களின் தியான சித்திரமாக மனதில் கொள்ளுங்கள். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

கணபதி என்றிட கலங்கும் வல்வினை.
கணபதி என்றிட காலனும் கைதொழும்..
கணபதி என்றிட கருமம் ஆதலால் ..
கணபதி என்றிட கவலை தீருமே..!!

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர். ஜோதிடம், தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர். தொடர்புக்கு : 9944865943



# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

**97917 76534**

www.naamnagarathar.com